அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு நாணயமாற்று நிறுவனம்
சாரங்கா
நகை மாடம்
MONEY EXCHANGE
ALL COUNTRIES
WESTERN UNION WU
moving money for better
021 221 7007
இல.157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: 16
விலை:20 ரூபா
காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆடி 03 வியாழக்கிழமை 19.07.2018 | கதிர் 255

# விரக்தியில் தமிழர்கள்

## தலைவர் சம்பந்தன் விசனத்துடன் பெல்ஜியக் குழுவிடம் எடுத்துரைப்பு



கொழும்பு, ஜூலை 19

**அரசின் செயற்பாடுகள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் வகையில் அமையவில்லை எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அதனால் தமிழர்கள் விரக்தியின் எல்லையில் இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.**

பக்கம் 03

# ஜனாதிபதி வேட்பாளராகக் கோட்டாவை மஹிந்த அறிவித்தார் எனப் புரளி அறிக்கை

## தெளிவுபடுத்துகிறார் முன்னாள் ஜனாதிபதியின் செலயாளர்

கொழும்பு, ஜூலை 19

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவே என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்து, உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார் என வெளியான அறிக்கை பொய்யானது. அப்படியான முடிவு எதையும் முன்னாள் ஜனாதிபதி எடுக்கவில்லை.

– இவ்வாறு அவரின் ஊடகச் செயலாளர் றோஷான்

பக்கம் 14

### இனி இது ரகசியம் அல்ல!

டெனிஸ்வரன் வழக்குக் குறித்து எல்லோரும் மறந்திருந்த காலத்தில், அப்படி ஒரு தீர்ப்பு வரப்போகின்றது, அதனால் மாகாண சபையில் பெரும் அதிர்வலைகள் ஏற்படலாம் என்று சுமார் மூன்று வாரங்கள் முற்கூட்டியே ஹேஸ்யம் கூறியிருந்தேன். வாசகர்களுக்கு அது

பக்கம் 03

# அரசமைப்பு நகலுக்கான ஆவணம்; கட்சிகளிடையே இணக்கம் இல்லை

## திருத்திய பின்னர் 2 வாரங்களில் மீளவும் கூட முடிவு

கொழும்பு, ஜூலை 19

அசரமைப்புவழிகாட்டல்குழு நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் குழுவின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில்கூடியபோது,உத்தேசப் புதிய அரசமைப்பின் நகலுக்கான மூல ஆவணம் பரிசீலிக்கப்பட்டது.

ஆனாலும், பல தரப்பினரும் அதில் குறை

பக்கம் 14

## ஆவாக் குழுவின் செயற்பாடு பயங்கரவாத நடவடிக்கை அல்ல

### நாடாளுமன்றத்தில் பிரதமர் விளக்கம்

கொழும்பு, ஜூலை 19

வடக்கில் உருவாகியுள்ள ஆவா குழு பயங்கரவாத குழுவல்ல. சட்டம் ஒழுங்கு சீர்குலைவின் விளைவாகவே அதனைக் கருத வேண்டியுள்ளது.

பக்கம் 14

## அச்சுவேலியில் இரவு வேளையில் அச்சமின்றி வீடு புகுந்து அட்டகாசம்



யாழ்ப்பாணம், ஜூலை 19

அச்சுவேலி பத்தமேனிப் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் புகுந்த கும்பல் ஒன்று அந்த வீட்டிலுள்ளவர்களை அச்சுறுத்தும் வகையில் அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டுத் தப்பிச் சென்றது என அச்சுவேலிப்

பக்கம் 14

## அஸ்மீன் மீது வழக்கு அனந்தி தொடருவார்!



யாழ்ப்பாணம், ஜூலை 19

என்னிடம் துப்பாக்கி உள்ளதாக பொய்யான கருத்தை வெளியிட்டுள்ள மாகாண சபை உறுப்பினர் அஸ்மினுக்கு எதிராக நீதிமன்றத்தில் தாம் வழக்குத் தொடரவுள்ளார் என்று வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி

பக்கம் 14

## 2 எதிரிகளுக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

பொறளைப் பகுதியில் 1998 ஆம் ஆண்டு பாலா என்பவரைச் சுட்டுக் கொலை செய்த சம்பவத்தில் இரண்டு எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அவர்களுக்கு மரணதண்டனை வழங்கித் தீர்ப் பளித்தது.

பக்கம் 14

## '1990' அம்புலன்ஸ் சேவை சனியன்று ஆரம்பம்

### நிகழ்வில் மோடி, ரணில் உரைகள்

கொழும்பு, ஜூலை 19

இந்திய அரசின் நிதி உதவியுடன் 1990 'சுவ செரிய' அவசர அம்புலன்ஸ் சேவை வடமாகாணத்தில் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பித்து வைக்கப்படும் இந்த நிகழ்வில்

பக்கம் 14

# ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை தாமே குறைத்தார் என மைத்திரி பெருமிதம்

### ஜோர்ஜியா நிகழ்வில் அவர் உரை



கொழும்பு, ஜூலை 19

உலகில் எந்தவொரு நாட்டின் ஜனாதிபதிக்கும் இல்லாத வகையில் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு எல்லையற்ற அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதைத் தாம் பதவிக்கு வந்து ஆறு மாதங்களில் குறைத்து, அவற்றை நாடாளுமன்றுக்குக் கையளித்தார் எனப் பெருமிதத்துடன் கூறினார்

பக்கம் 14

# டெனிஸ் சார்பு உத்தரவுக்கு எதிரான விக்கியின் மேன்முறையீடு 26க்கு!

## பரிசிலிக்கப்படாமலேயே மேலும் ஒருவாரம் தள்ளிப்போகிறது

கொழும்பு, ஜூலை 19

டெனிஸ்வரன் விவகாரத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்கால உத்தரவுக்கு எதிராக முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டு மனு நேற்று உயர் நீதிமன்றில் எடுக்கப்பட்ட பின்னர் அடுத்த 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அரசுத் தரப்பிற்குப் போதிய முன்னறிவித்தல் வழங்காததாலும், நேற்று இந்த மனு எடுக்கப்பட்ட

பக்கம் 14

காலைக்கதிர் Kalaikkathir



# இலங்கை தமிழ் குடும்பத்தைப் பிரித்த ஆஸி அரசின் செயலுக்கு ஐ.நா. கண்டனம்

கொழும்பு, ஜூலை 19

புகலிடம் தேடிய, கணவனை சிறிலங்காவுக்கு நாடு கடத்தி இலங்கை தமிழ் குடும்பத்தைப் பிரித்த ஆஸ்திரேலிய அரசின் செயலுக்கு ஐ.நா கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் புகலிடம் தேடிய 18 இலங்கையர்கள் நேற்று முன்தினம் கொழும்புக்கு நாடு கடத்தப்பட்டனர்.

இவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்களில் ஒருவரான திலீபன், தனது மனைவி மற்றும் 11 மாத குழந்தையிடம் இருந்து பிரிக்கப்பட்டு, இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதுதொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா. முகவர் அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

சிட்னியில் வசித்த இவரை, நாடு கடத்தியதன் மூலம், ஆஸ்திரேலியாவில் புகலிடம் வழங்கப்பட்ட அவரது மனைவி, 11 மாத குழந்தையுடன் தனித்து விடப்பட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை குடும்ப ஒற்றுமை என்ற அடிப்படை உரிமைக்கு முரணானது, குழந்தையின் நலன் குறித்த அடிப்படை கொள்கைகளுக்கும் எதிரானது.

தந்தை நாடு கடத்தப்படமாட்டார், குடும்பத்துடன் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார் என்ற உத்தரவாதத்தை ஆஸ்திரேலியாவிடமிருந்து கோரியிருந்தோம்.

ஆஸ்திரேலியாவின் உள்துறை அமைச்சருக்கு, தனியார் சட்டத்துறையினர் பலர் வேண்டுகோள் விடுத்தபோதிலும் அது வெற்றியளிக்கவில்லை.

கடல்வழியாக ஆஸ்திரேலியாவை சென்றடைபவர்கள், தங்கள் குடும்பத்தவர்களுடன் சேரவிடாமல் தடுக்கப்படுகின்றனர்.

நவுரு தீவில் இவ்வாறு பல பெற்றோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கர்ப்பிணிகளான மனைவிமார்கள் பிரசவத்திற்காக ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

நவ்ரு அல்லது பபுவா நியுகினி அகதிகள் குடியேற்றத்திற்கான பொருத்தமான இடமில்லை என்ற போதிலும் குடும்பங்களை ஆஸ்திரேலிய அரசு இணைய விடவில்லை.

சில வேளைகளில் பெற்றோர்கள் சிகிச்சைக்காக ஆஸ்திரேலியா செல்லும் வேளை குழந்தைகள் நவ்ருவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது குழந்தைகளின் உளநலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், இலங்கை அகதிகள் விவகாரம் வெறுமனே குடும்பங்களை ஒன்று சேரவிடாமல் தடுப்பதற்கு அப்பாற்பட்டது என்றும் அகதிகளுக்கான ஐ.நா. முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

## வவுனியா வர்த்தக நிலையங்கள், விடுதிகளை உடன் பதிவு செய்ய நகர சபை நடவடிக்கை



வவுனியா நகரசபைக் குட்பட்ட பகுதிகளிலுள்ள வியாபார நிலையங்கள், விடுதிகள், வாகன திருத்துமிடங்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகர சபையின் 4 ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கு பதில் அளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா நகரப்பகுதியில் உள்ள சில வீடுகளில் விபசாரம் இடம் பெறுவதாக நகரசபை உறுப்பினர் பாயிஸ் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இதன் போது நகரசபை உறுப்பினர் ரி.கே.இராஜலிங்கம் சில விடுதிகளிலும் விபசாரம் இடம்பெறுகின்றன. சில விடுதிகள் போதியவசதிகள் இன்றி இயங்குகின்றன. இவற்றை நகரசபை கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது பதில் அளித்த நகரசபைத் தலைவர் இ.கௌதமன், வவுனியா நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள், விடுதிகள், வாகன திருத்துமிடங்கள் என்பவற்றைப் பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விண்ணப்ப படிவத்தை பெற்று பதிவு செய்யும் போது மேற்கண்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படும். அத்துடன் வீதிகளில் வைத்து வாகனங்களைத் திருத்தும் வாகன திருத்துமிடங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தார்.

(க)

## மரக்கறிகளின் விலைகள் ஓரிரு நாளில் குறையும்!

கொழும்பு, ஜூலை 19

தற்போது உயர்வாக காணப்படும் மரக்கறி வகைகளின் விலை அடுத்த இரண்டு நாள்களில் குறைவடையும் என்று ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் இக்காலப் பகுதியில் மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பதுண்டு. தற்போது சந்தைக்கு பயிரிடப்பட்ட அதிகமான மரக்கறிகள் அறுவடை செய்து பெறப்படுவதனால்; மரக்கறிகளின் விலை குறைவடையும்.

காலநிலை மாற்றம் காரணமாக சில மாதங்களாக மரக்கறி வகைகளின் விலை அதிகரித்தன.

40 ரூபா வரி அறவிடுவதனால் இறக்குமதி செய்யப்பட கிழங்கு



மற்றும் பெரிய வெங்காயத்தின் விலை ஓரளவு அதிகரித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் அதிகளவில் அறுவடை செய்யப்படுவதனால் அடுத்த மாதம் முதல் விலை குறைவடையும். இதேவேளை முட்டையின் விலை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுவாமியின் அழைப்பின் பேரில் புதுடில்லி செல்கிறார் மஹிந்த!



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் செப்ரெம்பர் மாதம், புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சுப்ரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

சுப்ரமணியன் சுவாமி விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டே, மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லிக்குப் பயணமாகவுள்ளார்.

சுப்ரமணியன் சுவாமி தலைவராக இருக்கும், விராட் ஹிந்துஸ்தான் சங்கம் என்ற அமைப்பின் பொதுக் கூட்டத்தில், செப்ரெம்பர் 12 ஆம் திகதி மஹிந்தவும் உரையாற்றவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் அனைத்து தேசப் பற்றாளர்களையும் பங்கேற்குமாறு சுப்ரமணியன் சுவாமி தனது கீச்சகப் பக்கத்தில் அழைப்பு விடுத்துள்ளார்.

## ஹெரோயினுடன் பாடசாலை பாதுகாப்பு அதிகாரி கைது!

குளியாபிட்டிய பகுதியில் பிரபல பாடசாலை ஒன்றின் பாதுகாப்பு அதிகாரியொருவர் ஹெரோயின் பக்கட்டுக்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் 6 ஹெரோயின் பக்கட்டுக்களுடன் பாடசாலைக்கு முன்னால் வைத்து கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா. தலைமை அதிகாரியுடன் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சந்திப்பு



இலங்கை விஜயம் செய்துள்ள ஐ.நா. அரசியல் விவகார திணைக்களத்தின் ஆசிய, பசுபிக் பிராந்திய தலைமை அதிகாரி மரி யமஷிட்டா நகரத்திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமை சந்தித்தார்.

அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது முக்கிய அரசியல், சமூக விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பில் ஐ.நா. இடைக்கால வதிவிடப் பிரதிநிதி ரெரன்ஸ் டி ஜோன்ஸ் மற்றும் ஐ.நா.வின் நல்லிணக்கத்துக்கான அபிவிருத்திக்கு மான ஆலோசகர் கீதா சப்ஹர் வால் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## அரச காணிகளில் தற்போது சட்டவிரோதமாக 5 லட்சம் பேர்

### ஆணைக்குழு ஆய்வில் வெளியான தகவல்

அரச காணிகளில் சட்டவிரோதமாக 5 இலட்சத்திற்கும் அதிகமானோர் வசிக்கின்றனர் என்று காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது என்று ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரேமபந்து ருவன் பத்திரன தெரிவித்துள்ளார்.

அவர்களுள் 50,000 பேருக்கு இந்தவருட இறுதிக்குள் காணி உறுதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, புத்தளம் உள்ளிட்ட சில மாவட்டங்களில் இதற்கான சில ஆரம்பக்கட்ட பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பி.ருவன் பத்திரன சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஜோர்ஜியாவில் ஜனாதிபதிக்கு வரவேற்பு



ஐந்தாவது திறந்த அரச கூட்டுறவு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜோர்ஜியாவை சென்றடைந்துள்ளார்.

ஜோர்ஜிய தலைநகரில் உள்ள விமான நிலையத்திற்குச் சென்ற பொழுது அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் ஷாவேஎிட்சேயினால் வரவேற்கப்பட்டார்.

ஐந்தாவது திறந்த அரச கூட்டுறவு மாநாடு இன்று வியாழக்கிழமை வரை இடம்பெறும். இந்த மாநாட்டில் ஜனாதிபதி கலந்து கொள்வார்.

பிரஜைகள் ஈடுபாடு, ஊழலுக்கு எதிரான போராட்டம் மற்றும் சிறந்த பொதுச் சேவை வழிகாட்டல் போன்ற விடயங்கள் குறித்து மாநாட்டில் ஆராயப்படும். மாநாட்டின் முக்கிய உயர்மட்ட குழு கலந்துரையாடலிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்வார்.

அதேவேளை, ஜோர்ஜிய ஜனாதிபதி ஜியோஜி மாக்வெலஸ்விலியை சந்தித்து இருதரப்பு பேச்சுகளில் ஈடுபடுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir



# யாழ் கோட்டையில் மீட்கப்பட்டது போர்த்துக்கேயர் கால மனித எச்சம்



யாழ்ப்பாணம் கோட்டையின் உள்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வு பணிகளின் போது மீட்கப்பட்ட மனித எலும்புகள் போர்த்துக்கேயர் காலத்தான் ஆக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

தற்போது மீட்கப்படும் மனித எலும்புகள்உள்பட அனைத்தும் பொது மக்களின் காட்சிக்கு வைக்கப்படும்.

– இவ்வாறு தொல்லியல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கோட்டையின் உள்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வு பணிகளின் போது மனித எச்சங்கள் மீட்கப்பட்டன எனச் செய்திகள் வெளியாகின.

அது தொடர்பில் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

யாழ்ப்பாணம் கோட்டையின் மத்தியில் அமைந்துள்ள பகுதியானது சோழர் காலத்திற்கு முற்பட்ட காலத்திற்கு முன்பாகவே யாழ்ப்பாணத்தின் தலைநகரமாக விளங்கியுள்ளது. அதற்கான ஆதராங்கள் சில கிடைக்க பெற்றுள்ளன.

கோட்டைஅமைந்துள்ளபகுதிகளில் கடந்த வருடம் அதிநவீன தேடு கருவி (ஸ்கானர்) மூலம் ஆய்வுகளை மேற்கொண்ட வேளைபோர்த்துக்கேயர்காலத்திற்கு முற்பட்ட வரலாற்று படிமங்கள் கண்டறியப்பட்டன.

தற்போது அமெரிக்க பல்கலை கழகம், யாழ்ப்பாண பல்கலை கழகம், தொல்லியல் திணைக்களம், மத்திய கலாச்சார நிலையம் என்பவற்றின் கூட்டு செயற்றிட்டமாகவே இந்த அகழ்வுபணிகள் முன்னேடுக்கப்படுகின்றன.

கோட்டையின் உட்புறமான மத்திய பகுதியில் முன்னதாக போர்த்துக்கேயர்காலத்து தேவாலயம் ஒன்று இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்க பெற்றுள்ளன.

தேவாலயத்திற்கு அருகில் கிணறு ஒன்று இருந்தமைக்கான சான்றுகளும், தேவாலய சுவர்கள் இருந்தமைக்கான சான்றுகளும் கண்டறியப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் அகழ்வு பணியின் போது மனித எலும்பு எச்சம் மீட்கப்பட்டது.

அது போத்துக்கேயர் காலத்தில் அடக்கம் செய்யப்பட்டவரின் எலும்பு எச்சங்கள் என நம்புகின்றோம்.

ஏனெனில் போத்துக்கேயர் காலத்தில் இறந்தவர்களை அடக்கம்செய்யும்போது மேற்கு நோக்கியவாறே அடக்கம் செய்யும் பழக்கம் இருந்தது.

அதன் பின்னரான கால பகுதியில்தான் இறந்தவர்களை கிழக்கு திசை நோக்கி அடக்கம் செய்யும் பழக்கம் வந்தது. ஆகவே அவை போர்த்துக்கீசர் காலத்திற்கு உரியவையாக இருக்கலாம் என நம்புகின்றோம்.

ஆய்வுப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு முதல் நாம் எதனையும் உத்தியோகபூர்வமாக செல்ல முடியாது.

ஆய்வுகளின் பின்னர் மீட்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் மக்களின் காட்சிக்காக பொது இடத்தில் வைக்கப்படும் – என்றார்.

# வெலிக்கட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு சிறை

வெலிக்கட பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி கமல் அமரசிங்கவுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஒருவரை அச்சுறுத்திய குற்றத்திற்காக உயர் நீதிமன்றத்தால் அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## ‘ஸ்ரீலங்கன்’, ‘மிஹின் லங்கா’ ஊழல் மோசடி:

# விசாரணைக் குழுவிடம் மங்களவும் சாட்சியம்

கொழும்பு, ஜூலை 19

‘ஸ்ரீலங்கன்’ எயார்லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் மிஹின் லங்கா ஆகிய நிறுவனங்களில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் நிதியமைச்சர் மங்கள சமரவீர வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

மிஹின் லங்கா நிறுவனத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளுக்கு அமைவாக அந்த நிறுவனத்தை ஆரம்பிக்கும் சமயத்தில் உரிய அமைச்சர் என்ற வகையில் சாட்சியமளிப்பதற்காக அவர் ஆணைக்குழுவால் நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

இதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளயிட்ட அமைச்சர், அந்த நிறுவனம் ஆரம்பிக்கப்படும் போது விமான சேவைகள் அமைச்சராக இருந்தமையின் அடிப்படையில் வாக்கு மூலம் வழங்கத் தாம் சென்றார் எனக் கூறினார்.

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவில் இருக்கக் கூடும்.

அந்த வழக்கின் இடைக்கால உத்தரவை ஒட்டி, இப்போது இன்னொரு விடயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வழக்குத் தொடர்பான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவுப்படி பந்து இப்போது ஆளுநரின் களத்தில்தான் உள்ளது.

அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைய மாகாண சபையின் அமைச்சர் வாரியத்தின் எண்ணிக்கையைச் சரிவரப் பேண வேண்டியவர் அமைச்சர்கள் நியமனத்துக்குப் பொறுப்பான ‘நியமன அதிகாரத் தரப்புத்தான்’ என்று நீதிமன்றம் கூறிவிட்டது. அதன் வியாக்கியானப்படி அது ஆளுநரைத்தான் குறிக்கின்றது.

ஆகவே, பிரச்சினை அவருக்குத்தான். தீர்வு அவர்தான் காண வேண்டும், நானல்லன் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் எண்ணுகிறார் போலும். அதுவும் சரிதான். அதில் தப்பிருப்பதாகவும் தோன்றவில்லை.

அத்தோடு, மாகாணசபையின் எஞ்சிய பதவிக் காலம் இன்னும் 98 நாள்கள்தான். உயர் நீதிமன்றம், மேன்முறையீடு என்று காலத்தை இழுத்தடித்து விட்டால் சாமாளித்துவிடலாம் என்றும் அவர் சிந்திக்கிறார் போலும்.

மாகாண சபையின் பதவிக் காலம் முடிந்த பின்னர் நீதிமன்றம் தலையால் கிடங்கி கிண்டினாலும் கூட டெனிஸ்வரனை அமைச்சர் பதவியில் இருத்த முடியாது. ஆகவே அதுவரை அவருக்குப் பதவியைக் கொடுக்காமல் இழுத்து விட்டால் அதற்குப் பிறகு அவர் யாரோ, நான் யாரோ என்று தனிவழி போய்விடலாம், வழக்கு ஒன்றும் செய்யாது என்றெல்லாம் கூட முதல்வரின் சிந்தனை ஓடக் கூடும்.

இதெல்லாம் சரிதான். ஆனால் இதனையும் தாண்டி இவ்விடயம் முதல்வருக்குக் காலம் கடந்தும் தலையிடியாகத் தொடரலாம். அதற்கும் ஏது நிலைகள் காணப்படும்கின்றன என சட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

நீதிமன்ற உத்தரவு ஆளுநருக்கு உரியது என்றாலும், அது தொடர்பில் பந்தை முதல்வரின் களத்தில் மெல்லத் தள்ளிவிட்டுத் தாம் தப்ப நினைக்கின்றார் ஆளுநர் என்றே நான் கருதுகின்றேன்.

*“நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்தும் எண்ணத்துடன் நான் நடவடிக்கை எடுத்தேன், ஆனால் முதலமைச்சர்தான் அந்தத் தீர்ப்பை தமக்கு ஏற்றமாதிரி வியாக்கியானம் செய்து விட்டு, அதனடிப்படையில் எனக்கு ஒத்துழைக்காமல் இழுத்தடித்து வருகின்றார். அவரின் ஒத்துழைப்பின்மையால்தான் நீதிமன்ற உத்தரவை என்னால் நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளது”* – என்று ஆளுநர் நீதிமன்றத்திடம் கூறிவிட்டுத் தாமாகப் பொறுப்பிலிருந்து நைஸாகக் கழறக் கூடிய சூழல், சந்தர்ப்பம், வாய்ப்பு எல்லாம் கூடி வருகின்றன என்றே என் மனதுக்குள் படுகின்றது.

போதாக் குறைக்கு இந்த விவகாரத்தை ஒட்டி பத்திரிகைகளுக்கும் ஊடகங்களுக்கும் முதல்வர் விக்கி வெளியிட்ட கருத்துக்கள், அறிக்கைகள் போன்றவற்றையும் திரட்டி எடுத்துக் கொண்டு கொழும்பு விரைகிறார் வழக்கின் மனுதாரர் டெனிஸ்வரன்.

நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மூன்று வாரங்களாகியும் அந்த உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்கு ஆளுநரோ, முதலமைச்சரோ உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று நீதிமன்றத்திடம் சுட்டிக்காட்டுவதுடன் அது தொடர்பில் முதல்வர், ஆளுநர் ஆகிய தரப்புகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டை முன்வைக்கவும் அவர் தயாராகி வருகின்றார்.

அப்படி ஒரு நீதிமன்ற அவமதிப்பு வழக்கை அடுத்து வரும் சில தினங்களில் டெனிஸ்வரன் தாக்கல் செய்வார் எனத் தெரிகின்றது.

வடமாகாண சபையின் பதவிக் காலம் முடியும் போது, தமது அமைச்சுப் பதவிக்காக வேண்டி டெனிஸ்வரன் தாக்கல் செய்த வழக்கும் காலாவதியாகிப் போகலாம். ஆனால் நீதிமன்ற அவமதிப்பு விவகாரம் காலாவதியாகிவிடாது. அது தொடரும்.

அப்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால், வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிந்த பின்னரும் – முதல்வராக அல்லாமல் சாதாரண சி.வீ.விக்னேஸ்வரனாகவும் – அந்த வழக்கை அதன் முடிவு வெளிவரும்வரை விக்னேஸ்வரன் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனச் சுட்டிக்காட்டுகின்றன சட்ட வட்டாரங்கள்.

ஆளுநரைப் பொறுத்தவரை பிரச்சினை இல்லை. வடக்கு மாகாணசபையின் தற்போதைய பதவிக் காலம் முடிந்த பின்னரும் அவர் பதவியில் இருப்பார். அவருக்காக சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் பிரசன்னமாகி வாதாடும்.

ஆனால் முதல்வரின் நிலை? மாகாண முதலமைச்சர் பதவி காலாவதியான பின்னரும், டெனிஸ் தொடரும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை அவர் தனி மனிதனாக நின்று, சொந்தச் செலவில் எதிர்கொள்ள வேண்டியவராக இருப்பார்.

அதற்கு அவர் தயாரா?

அவர் சிந்திக்க வேண்டிய விடயம் இது. தமது தற்போதைய பதவிக்காலத்தின் பின்னரும் இந்த வழக்கைத் தனி ஆளாக நின்று எதிர்கொள்ள அவர் தயார் என்றால் டெனிஸாரும் தயார் என்கின்றன டெனிஸுக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

சரியான போட்டியாகத்தான் விடயங்கள் தொடரப் போகின்றன. முதல்வர்தான் பாவம். நீண்ட சட்டச்சிக்கல் இழுபறியில் மாட்டப் போகின்றார் போலும்...!

- மின்னல் -

### விரக்தியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பெல்ஜியம் நாடாளுமன்ற நட்புறவு குழுவினருக்கும் எதிர்க்கட்சி தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அப்போதே இந்தக் கருத்தை சம்பந்தன் குறிப்பிட்டார்

இதன்போது, நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து பெல்ஜியம் நாடாளுமன்ற குழுவினரைத் தெளிவுபடுத்தினார் சம்பந்தன்.

நாட்டில் தற்போது காணப்படும் அரசமைப்பு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதல்ல எனத் தெரிவித்த சம்பந்தன், நாட்டைப் புதிய பாதையில் கொண்டுசெல்லும் நோக்கில் புதிய அரசமைப்பு இவ்வருட இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் சுட்டிக் காட்டினார்.

இந்நாட்டை முன்னேற்றமான பாதையில் இட்டுச் செல்வதா? அல்லது மீண்டும் பின்னோக்கி நகர்த்துவதா? என்பதே இன்றுள்ள தெரிவுகளாகும், நாட்டை முன்னேற்றமான ஒரு பாதையில் இட்டுச் செல்ல வேண்டுமாயின் ஒரு புதிய அரசமைப்பை நிறைவேற்றுவது இன்றியமையாததாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எதிர்பார்த்த உடனடி நிவாரணங்கள் கிடைக்காமையால் மக்கள் விரக்தி அடைந்திருக்கின்றமையையும், இராணுவம் கைவசப்படுத்தி வைத்துள்ள காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெற்றுவருகின்றமை குறித்தும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் குழுவினரைத் தெளிவுபடுத்திய சம்பந்தன், அவர்களின் உறவினர்கள் தொடர்ந்தும் தங்கள் அன்புக்குரியர்வர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் ஒரு நிர்க்கதி நிலைமையில் இருக்க முடியாது என்பதையும் உண்மை கண்டறியப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

அதேவேளை எமது மக்கள் பல மாதங்களாக இந்த விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றும் இந்த விடயங்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் எமது எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் வண்ணம் இல்லை என்றும் அவர் எடுத்துரைத்தார் என அறியவந்தது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மௌனம் கலைப்பாரா ஆளுநர்?

**வடக்கு மாகாணசபையின் பதவிக் காலம் எதிர்வரும் ஒக்ரோபர் 25 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. அப்படிப் பார்த்தால் இன்னும் 98 நாள்கள்தான் மிச்சமுள்ளன.**

**டெனிஸ்வரன் விவகாரத்தினால் முட்டுச் சந்தியில் தேங்கி நிற்கும் மாகாண சபையும், அதன் அமைச்சரவையும் மேற்கொண்டு முன்னேற்றகரமாக இயங்குமா என்ற சந்தேகம் தொடர்ந்து நீடிக்கின்றது.**

**வடக்கு மாகாணசபை தொடர்பில் மேன்முறையிட்டு நீதிமன்றம் கடந்த மாதம் 29 ஆம் திகதி ஓர் இடைக்கால உத்தரவு வழங்கியுள்ளது. மூன்று வாரங்களாகியும் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை.**

**அந்த உத்தரவுக்கு எதிராக முதலமைச்சர் விக்னேஸ்வரன் சார்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டை பரிசீலனைக்கு ஏற்பதா என்பதைக் கூட உயர் நீதிமன்றம் இன்னும் ஆராயவில்லை. அதுவும் கூட மேலும் ஒருவாரத்துக்கு – அடுத்த 26 ஆம் திகதிக்கு – தள்ளிப் போடப்பட்டு விட்டது. 26 ஆம் திகதிக்குப் பின்னர் அந்த மேன்முறையீட்டை பரிசீலனைக்கு நீதிமன்றம் ஏற்குமா என்பது தெரியவரும்.**

**அதுவரையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு தொடர்ந்தும் நடைமுறையில் – சட்ட வலுவில் – இருக்கப் போகின்றது.**

**அதன்படி –**

**வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் எண்ணிக்கை தொடர்பில் இருக்கும் சர்ச்சை நீடிக்கின்றது. அந்தச் சர்ச்சையால் சபையின் அமைச்சர் வாரியம் செயற்படுவதற்கான அந்தஸ்தை அது அரசமைப்பு ரீதியாக இழந்திருப்பதாகக் கருதப்படும்.**

**அமைச்சர் வாரியம் அரசமைப்பு ரீதியான அந்தஸ்தை இழந்ததாகக் கருதப்பட்டால் அது இயங்க முடியாது. அமைச்சர் வாரியம் இயங்காவிட்டால் மாகாண சபை ஸ்தம்பித்த நிலைதான். அதன் இயக்கம் ஒப்புக்குச் சப்பாணி என்பது போலதான் இருக்கப் போகின்றது.**

**இந்த இடியப்பச் சிக்கல் விவகாரம் குறித்து இப்போது முதல்வர் சில கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்.**

**டெனிஸ்வரன் விடயத்தில் நீதிமன்றத் தீர்ப்புக்குக் காரணம் அவரைத் தான் நீக்கியமை குறித்து ஆளுநர் அரச வர்த்தமானியில் பிரசுரிக்காமைதான் என்று குறிப்பிட்டு, இப் பிரச்சினைக்கான பொறுப்பை ஆளுநர் மீது பகிரங்கமாகச் சுமத்தி விட்டார் முதல்வர்.**

**சரியோ, பிழையோ இந்தக் சட்டச் சிக்கல் நிலையால் வடக்கு மாகாண சபையின் செயற்பாடே ஸ்தம்பித்த நிலையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது. இதனால் பெரிதும் பாதிக்கப்படப் போகின்றவர்கள் வடபகுதி மக்களே.**

**இந்த நிலைக்குக் காரணம் யார், அதில் தவறிழைத்தோர் எத்தரப்பினர் என்பது இனிமேலும் மூடி மறைத்துப் பேணக் கூடிய விடயமாக அமையக் கூடாது.**

**விவகாரம் நீதிமன்றத்தின் முன் உள்ளது என்பது உண்மைதான். ஆனாலும் அது தொடர்பில் இடம்பெறும் விடயங்களை அறியும் உரிமையும் கடப்பாடும் வடக்கு மாகாண மக்களுக்கும் உண்டு.**

**நடந்து போன சம்பவங்களில் தவறுக்குக் காரணம் ஆளுநர்தான் என்று முதலமைச்சர் பகிரங்கப்படுத்தி விட்டார். ஆனால் ஆரம்பம் முதல் ஆளுநர் பக்கம், இந்த விடயங்களின் போக்கைப் பொது மக்களுக்கு வெளிப்படுத்துவதில் ஒளிவு மறைவாகச் செயற்படுவதாகவே எமக்குத் தோன்றுகின்றது. ஏற்கனவே இப்பத்தியில் அதனைச் சுட்டிக் காட்டியுமிருக்கிறோம்.**

**டெனிஸ்வரன் விடயத்தில் மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணைக்கு ஆளுநர் தரப்பு முகம் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரராக ஆளுநர் தரப்பு அழைக்கப்பட்டும், அவர் சார்பில் அங்கு யாரும் பிரசன்னமாகவில்லை. அதனை நீதிமன்றம் தனது இடைக்கால உத்தரவில் ஒரு குறையாக வரிகளுக்கு இடையில் கோடி காட்டவும் தவறவில்லை.**

**இப்போதும் கூட இடியப்பச் சிக்கல் நிலைமை உருவாவதற்குக் காரணம் ஆளுநரின் தரப்புதான் என்று பகிரங்கமாக முதல்வர் அறிவித்த பின்னரும், ஆளுநர் தரப்பில் இருந்து நிலைமையைத் தெளிவுபடுத்தும் விளக்கம் மக்களுக்கு வரவில்லை.**

**டெனிஸ்வரன் விடயத்தில் இந்தச் சிக்கல் நிலையை – ஏற்பட்ட தவறை – நிவர்த்தி செய்யும் மார்க்கம் ஒன்றைக் கூட முதல்வர் பகிரங்கமாக ஆளுநருக்கு பிரேரித்திருக்கின்றார்.**

**ஆளுநர் என்ன செய்யப் போகின்றார்?**

**வடக்கு மாகாண சபைக்கு வந்த ஆளுநர்களில் மக்களுடன் மிக நெருக்கமாகப் பழகக் கூடியவர், தமிழ் தெரிந்தவர், எல்லா மட்டங்களில் உள்ளோருடனும் தொடர்பாடலைப் பேணுபவர் என்றெல்லாம் மதிக்கப்படுபவரைத்தான் இப்போது பெற்றுள்ளோம்.**

**ஆனால், இந்த நெருக்கடி விவகாரத்தில் மட்டும் அவர் மக்களுக்கு நிலைமைகளை எடுத்துரைத்துத் தெளிவுபடுத்தாமல் ஒதுங்கி நின்று காரியமாற்றுகின்றமை ஏன்?**

**பந்தை நீதிமன்றக் களத்துக்குள் அடித்து விட்டு பார்த்திருப்பவர் போல செயற்படாமல், மக்களிடம் உண்மை நிலைவரத்தை வெளிப்படுத்தி, தெளிவுபடுத்த அவர் முன்வரவேண்டும். அதுவும் அவரது கடப்பாடே.**

# மரண தண்டனைக் கைதிகளில் 7 தமிழரின் பெயர் விவரப் பட்டியல் நீதி அமைச்சுக்கு!

கொழும்பு, ஜூலை, 19

மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ள கைதிகளின் பெயர்கள் அடங்கிய ஆவணம், சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் குற்றங்களுக்கு மரண தண்டனை விதிப்பதற்காக, 18 பேர்களின் பெயர்கள் அடங்கிய ஆவணமே, இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில்,தமிழர்கள் ஏழு பேரின் பெயர்களும் உள்ளடங்கியுள்ளன.

2003ஆம் ஆண்டு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஸ்ரீ தர்மாகரன், 2007ஆம் தீர்ப்பளிக்கப்பட்ட வேலாயுதன் முரளிதரன், 2009 ஆம் ஆண்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ள சிவனேசன் ராஜா, 2012ஆம் ஆண்டு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள எஸ். புண்ணியமூர்த்தி, எஸ்.கணேசன், மற்றும் 2013ஆம் ஆண்டு தீர்ப்பளிக்கப்பட் டுள்ள டபிள்யூ. விநாயகமூர்த்தி மற்றும் எஸ்.ஏ. சுரேஷ்குமார் ஆகியோரே மரண தண்டனை அமுல் படுத்தப்படவுள்ள கைதிகளாவர்.

# காணி மத்தியஸ்தர் சபை தொடர்பில் வவுனியாவில் பயிற்சிச் செயலமர்வு!



வவுனியா, ஜூலை 19

நீதி அமைச்சின் ஏற்பாட்டில் விசேட காணி மத்தியஸ்தர் சபை தொடர்பான செயலமர்வு வவுனியாவில் இடம்பெற்றது.

2003 ஆம் ஆண்டு 21ஆம் இலக்க விசேட வர்த்தமானியின் பிரகாரம் விசேட காணி மத்தியஸ்தர் சபை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இதன்படி சுமார் 20 லட்சத்திற்குட்பட்ட பெறுமதிகளைக் கொண்ட காணிகளின் உடைமை மற்றும் உரிமை பிணக்கு களுக்கு தீர்வு காணும் முகமாக விசேட காணி மத்தியஸ்தர் சபை வவுனியா, திருகோணமலை, அனுராதபுரம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி வவுனியா மாவட்டத்திற்கான காணி மத்தியஸ்தர் சபையை நிறுவதற்காக மத்தியஸ்தர்களை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகத்தேர்வு கடந்த மாதம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றிருந்த நிலையில் அதில் 38 பேர் காணி மத்தியஸ்தர் சபை தொடர்பான விசேட செயலமர்வுக்கான 6 நாள் பயிற்சிப் பட்டறைக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கான பயிற்சிப் பட்டறை வவுனியா ஈரப்பெரியகுளம் ரொக்சைட் ஹோட்டலில் கடந்த 10 திகதி முதல் 15 வரை நடைபெற்றது. அவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மத்தியஸ்தர் நியமனம் அடுத்த மாதம் நடுப்பகுதியள வில் வழங்கப்படவுள்ளது.

இதில் சட்டத்தரணி திருநாவுக்கரசு, மத்தியஸ்த சபை பயிற்றுவிப்பாளர் விமல்ராஜ் மற்றும் புகாரி, மத்தியஸ்தர் சபை ஆணைக்குழு உத்தியோகத்தர் கீர்த்தனா ஆகியோர் கலந்து கொண்டு செயலமர்வுகளை வழிநடத்தியிருந்தனர். (கு - 100)

# மண்டேலாவின் சிந்தனைகள் நாட்டுக்கு சிறந்த வழிகாட்டல்



கொழும்பு, ஜூலை 19

தென்னாபிரிக்க முன்னாள் தலைவர் அமரர் நெல்ஸன் மண்டேலாவின் சிந்தனைகள் இந்த நாட்டிற்கு சிறந்த வழிகாட்டல்களாக அமையும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டின் ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் சமாதானத்தை கட்டியெழுப்ப பின்பற்றக்கூடிய வெளிநாட்டுத் தலைவர்களில் ஒருவரே நெல்ஸன் மண்டேலா ஆவார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அமரர் நெல்ஸன் மண்டேலாவின் நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு, வெளியிட்ட விசேட செய்திக் குறிப்பொன்றிலேயே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தம் ஒன்றின் பின்னர் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பான பல்வேறு சிந்தனைகளையும், அறிவுரைகளையும் அமரர் நெல்ஸன் மண்டேலாவின் கருத்துக்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார்.

# தேசிய அபிவிருத்தி வழிமுறை திட்டம் தொடர்பான அறிக்கை இன்று வெளியீடு

தேசிய ஏற்றுமதி அபிவிருத்தி வழிமுறை திட்டம் தொடர்பான அறிக்கை இன்று வெளியிடப்படுகிறது.

இந்தத் தேசியத் திட்ட அறிக்கைஇன்று மாலை அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வெளியிடப்படும்.


அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சியாக இந்தத் தேசிய ஏற்றுமதி அபிவிருத்தி மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப கட்ட தேசிய மட்ட கருத்தரங்கு கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்றது.

கருத்தாக்கம் மற்றும் முதலீடுகள் மூலம் இலங்கையை பிராந்தியத்தின் ஏற்றுமதி மையமாக மாற்றுவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதன் கீழ் ஆறு முன்னுரிமை துறைகளும் நான்கு வர்த்தக ஆதரவு செயல்பாடுகளும் அடையாளம்காணப்பட்டுள்ளன.

# வயோதிபரின் சடலம் மீட்பு



கிளிநொச்சி, ஜூலை 19

கிளிநொச்சி கல்மடுகுளத்திலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த 63 வயதுடைய சுந்தரம் புலேந்திரன் என்பவர் எனக் கூறப்பட்டது.

நேற்று முன்தினம் இவர் தொழிலுக்கு சென்ற போது காணாமல் போனார் என உறவினர்கள் தர்மபுரம் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில் இவர் நேற்றுக் காலை கல்மடு குளத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். (கு)

## நாளை

**20.07.2018**
**வெள்ளிக்கிழமை**

நட்சத்திரம் : சித்திரை பி.ப 1.55 வரை
திதி : அட்டமி மு.இ 6.50 வரை
சுபநேரம் : 6.01 – 7.31 வரை
இராகுகாலம் : 10.31 – 12.01 வரை

## 457 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஞாயிறன்று நியமனக் கடிதங்கள்

### யாழ். இந்துக் கல்லூரியில் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 19

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும்457தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப் படவுள்ளன என்று மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் காலை 8 மணிக்குவைபவம்நடைபெறும் இடத்திற்கு நியமனம் பெறும் ஆண் ஆசிரியர்கள் கறுப்பு நிற முழுக்காற்சட்டையும்,வெள்ளை நிறச் சட்டையும் (சேட்) 'டை' அணிவதோடு பெண் ஆசிரியர்கள் இள நிறத்திலான சாரி அணிந்து வருகை தர வேண்டும். இவர்களுக்குரிய அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பெயர் விவரங்களை வட மாகாண சபையின் இணையத் தளமான www.np.gov.lk இலும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இணையத்தள மான www.edumin.np.lk இலும் பார்வையி டமுடியும்.

மேலும் நியமனத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 457 தொண்டாசிரியர்களது தகைமைகள் தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் தகுந்த ஆதாரங்களுடன் 'செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்' எனும் முகவரிக்கு முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என்றும் செயலாளர் சி.சத்தியசீலன் குறிப்பிட்டுள்ளார். (இ

# மனித உரிமை ஆணையகத்தின் தலைவருக்கே அச்சுறுத்தல்

## சிவில் சமூகம் அதிர்ச்சி; கண்டனம்

கொழும்பு, ஜூலை 19

இலங்கையின் மனித உரிமை ஆணையகத்தின் தலைவர் தீபிக உடகமவிற்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதை சிவில் சமூக பிரதிநிதிகள் கண்டித்துள்ளனர்.

தீபிக உடகமவிற்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டமையை 37 சிவில் சமூக அமைப்புகளும்170 தனிநபர்களும் கடுமையாகக் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை மனித உரிமை ஆணையகத்தின் தலைவர் தீபிக உடகமவிற்கு எதிராக கொலை மிரட்டல்,வன்முறைகள் மற்றும் பகைமையைத் தூண்டும் கருத்துக்கள் வெளியாகியுள்ளமை குறித்து அதிர்ச்சியடைந்துள்ளோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தீபிக உடகமவிற்கு எதிரான அறிக்கைகள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கரிசனையையும், அச்சத்தையும் வெளியிடுவதுடன் அவருக்கான எங்கள் உறுதியான ஆதரவை தெரிவிக்கின்றோம் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தீபிகஉடகமவின்தலைமைத்துவத்தின் கீழ் இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்டுள்ள வெளிப்படையான, குறிப்பிடத்தக்க, சுயாதீன. கொள்கை தலையீடுகளை நாங்கள் வரவேற்கின்றோம் எனவும் சிவில் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஐக்கியநாடுகள் அமைதிப் படைக்கு அனுப்பப்படும் படையினரின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராயும் நடவடிக்கையை இலங்கை மனித உரிமை ஆணையகம் மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாகவே தீபிக உடகமவிற்கு எதிராக மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என சிவில் சமூக அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இது இலங்கைமனிதஉரிமை ஆணையகத்திற்கு வழங்கப்பட்ட ஆணை எனவும் குறிப்பிட்டுள்ள சிவில் சமூக அமைப்புகள் மரண அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் துணிச்சலாக தங்களது பணியை முன்னெடுத்து வருகின்றமை குறித்து ஆணையகத்தை பாராட்டியுள்ளன.

தீபிக உடகமவிற்கு எதிராக முன்னாள் படை அதிகாரி சரத் வீரசேகர அச்சுறுத்தலை விடுத்துள்ளார். மஃபிம அதனை வெளியிட்டுள்ளது, இந்த அச்சுறுத்தல் இலங்கை இராணுவத்தின் சம்மதத்துடன் இலங்கை இராணுவத்தினர் முன்னெடுத்துள்ள ஐக்கியநாடுகள் அமைதிப் படைக்கு அனுப்பப்படும் படையினரின் மனித உரிமை மீறல்கள்குறித்து ஆராயும்நடவடிக்கை தொடர்பானது எனவும் சிவில சமூக அமைப்புகள் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகள் அமைப்பின் நலன்களை முன்னெடுப்பதற்காக உடகம அரசசார்பற்ற அமைப்புகளுடன் சேர்ந்து பணியாற்றுகின்றார் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். தேசப்பற்றுள்ள அரசின் கீழ் துரோகிகள் அனைவருக்கும் மரணதண்டனை வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார் என அவை சுட்டிக்காட்டியுள்ளன. (கு)


## இராஜாங்க அமைச்சர் லக்கீ ஜயவர்தன நேற்றுமுன்தினம் கடமை பொறுப்பேற்பு!

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் லக்கீ ஜயவர்தன தனது கடமைகளை நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் முன்னிலையில் அமைச்சில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் டீ.ஜீ.எம்.வீ. ஹப்பு ஆராச்சியும் கலந்துகொண்டார்.

## கார் விபத்தில் இருவர் படுகாயம்





மட்டக்களப்பு, ஜூலை 19

மட்டக்களப்பு – செங்கலடியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பை நோக்கி சென்று கொண்டிருந்த கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதி மருங்கிலிருந்தமின்கம்பத்துடன்மோதுண்டு நொருங்கியுள்ளது.

இந்த விபத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த முஹம்மத் இப்றாஹிம் றிஸ்வான் (வயது 35), மட்டக்களப்பு ஊறணியைச் சேர்ந்த அப்புஹாமி வில்லியம் சிங்ஹ ஹேமாவதி (வயது 35) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த காரின் பின்னிருக்கை ஆசனத்தில் அமர்ந்திருந்து பயணம் செய்த தந்தை மற்றும் அவரது 4, 7 வயதான இரு சிறுவர்களும் எதுவித காயங்களுமின்றித் தப்பியுள்ளனர்.

இந்த சம்பவம் பற்றி ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ்.பல்கலையில் நாடக விழா; இன்று முதல் 3 தினங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

இன்று 19 ஆம் திகதி வியாழன் முதல் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரை – தொடர்ந்து 3 தினங்கள் – யாழ். பல்கலைக்கழகத்தின் நுண் கலைத் துறை மற்றும் நாடகமும் அரங்கக் கலை மாணவர்களின் வெறுவெளி அரங்கக் குழுவினரால் நாடக விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் விழாவின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு, கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

மேலும் சமகால அரங்கின் போக்குகள் தொடர்பான கலந்துரையாடல் 20, 21 ஆகிய திகதிகளில் காலை 9 மணி முதல் 11 மணி வரையும் ஆற்றுகைகள் 12.30 முதல், 2.25 வரை, 4 முதல் 5.30 வரை, 6.15 முதல் 8.30 வரையும் இடம்பெறவுள்ளன.

இவ் விழாவிலே மரபுவழி நாடகம், சமகால நாடகம், சிறுவர் நாடகம், சமூக நாடகம், தெருவெளி நாடகம் போன்ற ஆற்றுகைகளும் திறந்த வெளி அரங்கு மற்றும் பொருளியல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. நாடகத் துறையில் ஆர்வமுடைய அனைவரும் இவ் விழாவில் கலந்து கொள்வதன் மூலம் பயன் பெறமுடியும் என்று நுண் கலைத் துறையின் பணிப்பாளர் திருமதி க.நவதர்ஷனி அறிவித்துள்ளார். (இ

### ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆரம்பமாவதால்

## எதிர்வரும் 31 ஆம் திகதி தொடக்கம் தனியார் வகுப்புக்களுக்கு தடை!

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர் முதலாம் திகதி நிறைவடையவுள்ள நிலையில் இதனை முன்னிட்டு எதிர்வரும் 31ஆம் திகதிக்குப் பின்னர் தனியார் வகுப்புக்கள் நடத்தப்படக் கூடாது என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

இம் முறை நாடளாவிய ரீதியில் மொத்தமாக 2 44,146 பாடசாலை மூலமான பரீட்சார்த்திகளும், 77,323 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். பரீட்சைகளை நடத்துவதற்காக 2,268 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்முறை பாடசாலை மூலம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதிப்பத்திரம் பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரீட்சை அனுமதிப்பத்திரம் அவர்களது தனிப்பட்ட முகவரிக்கும் அடுத்த வாரமளவில் அனுப்பி வைக்கப்படும்.

இதேவேளை கைத்தொலைபேசி மற்றும் கணிப்பான் உள்ளிட்ட எந்தவிதமான இலத்திரனியல் சாதனங்களையும் பரீட்சை நிலையத்திற்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் சோதனைகளை மேற்கொள்வதற்கும் விசேட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதே வேளை இவ்வாண்டு தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை அடுத்த மாதம் 5ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இப்பரீட்சைக்கு 3 இலட்சத்து 55,321 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இவர்களில் 87,556 தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகளும் 267,765 சிங்கள மூலமான பரீட்சார்த்திகளும் உள்ளடங்குகின்றனர்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிறு மாலை 4 மணிக்கு யாழ். ஸ்ரான்லி வீதி 'டி.எம்.ஐ' கல்வி நிறுவனத்தின் 'யுத்தத்திற்கு பின்னரான இலங்கை அரசியல்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் சொ.சிவபாலன் ஆரம்ப உரையாற்றுவார். (இ

## மறவன்புலோ ஆலய அலங்கார உற்சவம்

நாவற்குழி, ஜூலை 19

கைதடி, நாவற்குழி மறவன் புலோ கலையாபரணன் கோட்டை ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ வள்ளி வேலவன் தேவஸ்தான அலங்கார உற்சவம் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் இடம்பெறும்.

தினமும் மாலை உற்சவம் 6.30 மணியளவில் ஆரம்பமாகி விசேட பூஜைகள் வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று, எம் பெருமான் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேதராக உள் வீதி, வெளிவீதி உலா வருவார். (இ

## மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூலை 19

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் –**

மகாமயிலங்குளம், குடாகச்சக் கொடிய, துட்டுவாகை, குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை, கொக்கெலிய இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# உயர்தரத்தில் தோற்றவிருப்போருக்கு ஆணையாளர் நாயகத்தின் அறிவிப்பு

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கு இம்முறை தோற்றவிருக்கும் விண்ணப்பதாரிகளில் இதுவரையில் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் நாளை 20ஆம் திகதிக்குள் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

இது வரையிலும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டின் பிரதி அல்லது பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்காக அஞ்சல் அதிபரினால் உறுதிப்படுத்தி பெற்றுக் கொண்ட கடிதத்துடன் விண்ணப்பபடிவத்தை அஞ்சல் அலுவலகத்தில் பதிவு செய்து அனுப்பிய பற்றுச் சீட்டுடன் பரீட்சைகள் திணைக்களத்தின் பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும் அல்லது நேரடியாக வருகை தர வேண்டும்.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்று பாடமாற்றம், மொழி மாற்றம் அல்லது வேறு ஏதேனும் மாற்றங்கள் தேவைப்படும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாக பரீட்சைத்திணைக்களத்தின் பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்புக்கிளைக்கு வருகை தந்தோ அல்லது 011 -2784208 , 011 -2784537 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது 011 – 2784422 என்ற தொலைநகல் இலக்கத்திற்கோ நாளைய தினத்திற்குள் அறியத்தர வேண் டும். மேலும் இவ்வருடத்திலிருந்து 3 மணித்தியாலங்கள் கொண்ட வினாப்பத்திரங்களுக்கு அவற்றை வாசிப்பதற்கும் வினாக்களைத் தெரிவு செய்வதற்குமாக 10 நிமிடங்கள் மேலதிகமாக வழங்கப்படுகின்றது. கல்வி அமைச்சின் தீர்மானத்தின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினசரி ராசி பலன் (19.07.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 3ஆம் நாள் வியாழக்கிழமை ஸப்தமித்திதி பகல் 1.36 மணி வரை பின்னர் அஷ்டமி. நட்சத்திரம்: அத்தம் காலை 7.52 வரை பின்னர் சித்திரை . சித்தயோகம்கல் 1.36 மணி வரை பின்னர் அசுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 1.51 மணி முதல் 3.25 மணி வரை.

**சுபநேரம்** - காலை 7.32 மணி முதல் 9.02 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத வளர்பிறை அஷ்டமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - சித்திரை.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளால் திறமைகளால் உயர்வுகள் கிடைக்கும். விவசாயப் பொருள்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

**ரிஷபம்** இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் இனிய சூழல் நிலவும். வெளிநாட்டுத் தொடர்புகள் பயனுள்ளதாக அமையும். விலையுயர்ந்த பொருள்கள் பரிசாகக் கிடைக்கும்.

**மிதுனம்** கவலையான நாள். வருமானம் குறையும். உத்தியோகத்தில் கூடுதல் பணிகள் செய்ய வேண்டி வரும். வரவுக்கு மீறிய செலவுகள் வந்து கடன் படும் நிலை உண்டாகும். உறவுகளுடன் பகை உண்டாகும்.

**கடகம்** மத்திமமான நாள். பணவரவு சுமாராக இருக்கும். குடும்ப உறவு சச்சரவாக இருந்தாலும் மகிழ்ச்சியும் கூடவே இருக்கும். வேலை தேடுவோருக்கு வெகு பிரயாசையின் மேல் வேலை கிடைக்கும்.

**சிம்மம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். தொழில் முன்னேற்றமடையும். பணிபுரியும் இடத்தில் முதன்மை தன்மையை அடைவார்கள். சமூகத்தில் வரவேற்பு அதிகரிக்கும்.

**கன்னி** அனுகூலமான நாள். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். வராத கடன் வசூலாகும். தொழில் ரீதியான பயணம் பயனுள்ளதாக அமையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சகோதர உறவு வலுவடையும்.

**துலாம்** யோசனையான நாள். பொருளாதாரம் நலிவடையும். தொழிலில் போட்டிகள் உண்டாகும். தேவையற்ற செலவுகளால் மன உளைச்சல் உண்டாகும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும்.

**விருச்சிகம்** யோகமான நாள். பணபலம், மன பலம் அதிகரிக்கும். விடுபட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். சிலருக்கு அரசு வழியால் வீடு, காணி என்பன கிடைக்கும்.

**தனுசு** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமநிலையில் இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். சில விஷயங்களில் தாமதமாகச் செயற்படுவார்கள். வியாபாரத்தில் பேட்டிகளால் வருமானம் குறையும்.

**மகரம்** யோகமான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்ப நிலையில் இணக்கமான போக்குத் தென்படும். தொழிலில் படிப்படியாக வளர்ச்சிகளைப் பெறுவார்கள். சகோதர உறவு பலப்படும்.

**கும்பம்** துன்பமான நாள். பணக் கஷ்டம், மனக் கஷ்டம் உண்டாகும். குடும்ப அமைதி குன்றும். தொழிலுக்கு உழைப்புக்குத் தகுந்த பலன் கிடைக்காது. நட்புகளால் சிலருக்கு பண இழப்பு உண்டாகும்.

**மீனம்** விருத்தியான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். தடைப்பட்ட காரியம் கைகூடும். செலவுகள் கட்டுப்படும். பணியில் இவர்கள் விரும்பிய பணி கிடைக்கும். மாணவர்கள் தேர்வில் சிறப்பாக வெற்றி பெறுவார்கள்.

சந்திராஷ்டம நாள்; **அவிட்டம் 3ஆம், 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# மாலைதீவில் காப்பாற்றப்பட்ட 7 மீனவர்களும் நாடு திரும்பினர்



மாலைதீவை அண்டிய கடற்பகுதியில் காப்பாற்றப்பட்ட இலங்கை மீனவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அண்மையில் மாலைதீவை அண்டிய கடற்பகுதியில் அந்நாட்டு கரையோரப் பாதுகாப்புப் படையினரால் காப்பாற்றப்பட்ட ஏழு இலங்கை மீனவர்களும் நேற்று முன்தினம் விமானத்தின் மூலம் நாட்டை வந்தடைந்தனர் என்று மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்கள் பயணித்த இழுவைப் படகுடன் கடந்த மாதம் 29ஆம் திகதி காணாமற் போயிருந்தனர். தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்தப் படகு மாலைதீவை அண்டிய கடற் பிரதேசத்தில் மிதந்து காணப்பட்டது. விடயத்தை அறிந்தவுடன் அமைச்சு துரித நடவடிக்கை எடுத்தது. படகை திருத்தி அமைப்பதற்காக நாட்டுக்கு எடுத்து வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# நீதிமன்றை அவமதித்த ஞானசாரருக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு ஓக.8 இல்



ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் கடந்த 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி நீதிவான் முன்னிலையில் நடந்து கொண்ட விதம் மற்றும் நீதிமன்றத்தை அவமதித்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வழங்கப்படும் என நீதி மன்றம் நேற்று அறிவித்துள்ளது.

அப்போது ஹோமாகம நீதிவானாக இருந்த ரங்க திஸாநாயக்கவால் ஞானசார தேரருக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது.

வழக்கு விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில் தீர்ப்பை எதிர்வரும் மாதம் 8ஆம் திகதி அறிவிப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி ப்ரீதி பத்மன் சுரசேன மற்றும் சிரான் குணரத்ன ஆகியோரால் தீர்ப்பு அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






12 கல்லூரிகளில் 8,500 மாணவர்களுக்கு விழுமியங்கள் என்னும் பொருளில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை தமிழருவி த.சிவகுமாரன் நிகழ்த்தினார். வடமராட்சியில் ஆறு தினங்களாக இடம்பெற்ற, இக்கருத்தரங்குகளை வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது. அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனின் நெறிப்படுத்தலில் ஒவ்வொரு கல்லூரிகளிலும் தலா ஒருமணி நேரம் இடம் பெற்ற இக்கருத்தரங்குகள் மிகவும் வெற்றிகரமாக அமைந்திருந்தன. கல்வியமைச்சின் நிர்வாகத்திற்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர் க.கந்ததாசன் அனைத்துக் கல்லூரிகளிலும் இக்கருத்தரங்குகளை ஒழுங்கமைத்திருந்தார்.

# இலங்கை – சிங்கப்பூர் உடன்படிக்கை: எதிர்க்கட்சிகள் போலி குற்றச்சாட்டுகள்

கொழும்பு, ஜூலை 19

**இலங்கைக்கும், சிங்கப்பூருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர உடன்படிக்கை எட்டப்பட்டதனால், 1, 600 கோடி டொலர்களுக்கும் அதிகமான நேரடி முதலீடுகளை மேற்கொள்ள சிங்கப்பூர் நிறுவனங்களிடமிருந்து பிரேரணைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.**

நேற்றுதினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு பிரேரணைமீதான விவாதத்தில் மூலோபாய மற்றும் வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கைக்கும், சிங்கப்பூருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர உடன்படிக்கை திருட்டு உடன்படிக்கை அல்ல. இந்த உடன்படிக்கைக்கு கடந்த ஜனவரி 16 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி அளித்தது. இந்த உடன்படிக்கை தொடர்பில் எதிர்க்கட்சி போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் வரி விலக்குகள் வழங்கப்பட்டாலும் சுங்கத் திணைக்களத்தின் 97.8 வீத வரி வருமானம் பாதுகாக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் சிங்கப்பூரில் இருந்து செய்த இறக்குமதி மூலம் அரசு 3, 500 கோடி ரூபாய்களை வருமானமாக ஈட்டியிருந்தது.

இந்த ஒப்பந்தத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கவில்லையென முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை. கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதி அமைச்சரவை இதற்கு அனுமதி வழங்கியது. ஜனவரி



நாடாளுமன்றத்தில் சமரவிக்கிரம தெரிவிப்பு

9ஆம் திகதி முன்வைக்கப்பட்ட யோசனை மீண்டும் திருத்தங்களுடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது.

அமைச்சரவையில் இருந்து இதற்கு ஒப்புதல் வழங்கிய எஸ்.பி.திசாநாயக்க தற்பொழுது அமைச்சரவை அனுமதி பெறப்படவில்லையெனக் கூறுவது அடிப்படையற்றது

இந்த ஒப்பந்தத்தின் கீழ் சிங்கப்பூர் பிரஜைகளோ அல்லது வேறு எந்தநாட்டின் பிரஜைகளோ சுதந்திரமாக இலங்கைக்குள் வந்து பணியாற்ற முடியாது.

சிங்கப்பூருடனான ஒப்பந்தத்தின் கீழ் சிங்கப்பூர் நிறுவனமொன்றின் பணியாளராக இருந்தால் மாத்திரமே இலங்கைக்கு வந்து சேவைசெய்ய முடியும். இந்த நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் 2 வருடங்கள் மாத்திரமே இலங்கையிலிருக்க முடியும். ஆகக் கூடிய ஐந்து வருடங்களுக்கே வீசா அனுமதி வழங்கப்படும்.

சிங்கப்பூர் நிறுவனத்துக்காகப் பணியாற்றுபவர்கள் ஒரு வருடம் முதல் ஐந்து வருடங்கள் வரையிலேயே இலங்கையிலிருக்க முடியும். அது மாத்திரமன்றி குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழேயே வீசாவுக்கான விண்ணப்பங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். விசேட அனுமதிகள் எதுவும் வழங்கப்படா அது மாத்திரமன்றி, இந்த ஒப்பந்தத்தின் கீழ் பெருந்தொகையான அரிசிநாட்டுக்குள்கொண்டு வரப்படப் போகிறது.

இதனால் உள்ளூர் நெல் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படப் போகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இது முற்று முழுதும் உண்மைக்குப் புறம்பானது

சிங்கப்பூர் மான்பவர் கம்பனிகள் இலங்கையில் தமது கிளைகளை ஆரம்பித்து சேவைத்துறையை ஆக்கிரமிப்புச் செய்ய முடியும் என்ற சந்தேகங்கள் முன்வைக்கப்படுகின்றன. எனினும் பணியாளர்கள் தொடர்பாக உள்ளடக்கப்படவில்லை. எனவே பணியாளர்களை உள்ளீர்ப்பது தொடர்பான விடயங்களை மேற்கொள்ள முடியாது.

எந்தவொரு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையால் எவருக்காவது பாதிப்பு ஏற்படுமாயின் அதற்கு விரிவான வர்த்தக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இயந்திரங்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் துறைசார் மீள்பயிற்சி போன்ற விடயங்கள் இதில் உள்ளடக்கப்படும்.

இலங்கைக்கும், சிங்கப்பூருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர உடன்படிக்கையால், கடந்த இரண்டு மாதங்களுக்குள் மாத்திரம் 1, 600 கோடி டொலர்களுக்கும் அதிகமான நேரடி முதலீடுகளை மேற்கொள்ள சிங்கப்பூர் நிறுவனங்களிடமிருந்து பிரேரணைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் போலிப் பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டாமென அவர் அனைத்துத் தரப்புக்களையும் கேட்டுள்ளார். அரசியல் இலாபம் கருதாமல், இதனை பயன்படுத்த வேண்டும். இளம் சந்ததியை கருத்திற்கொண்டு செயற்படுமாறும் அமைச்சர் கூறினார். (கு)

# சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சம்பளத்தை அதிகரிக்க துணைபுரியும்!

## இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 19

மக்களின் சம்பள மட்டத்தை அதிகரிப்பதற்கு இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை துணைபுரியும். இந்த உடன்படிக்கை வர்த்தக நடவடிக்கைக்கு அப்பால் ஒரு முதலீட்டு உடன்படிக்கையாகும் என்று தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.



இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் –

உலக நாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் ஊடாக உலக உற்பத்தி வலையமைப்புக்குள் இணைந்து கொள்ளவேண்டும். இதன் ஊடாகவே நாட்டுக்குள் வரும் அந்நியச் செலாவணியை அதிகரிக்க முடியும்.

கடந்த அரசில் பெறப்பட்ட கடன்களுக்கான கொடுப்பனவாக 400 கோடி அமெரிக்க டொலர் செலுத்தப்பட வேண்டியுள்ளது. 2022ஆம் ஆண்டு வரையான நான்கு வருடத்தில் 1, 500 கோடி அமெரிக்க டொலர் செலுத்த வேண்டியுள்ளது. இதற்கான காரணம் டொலர் வருமானம் குறைந்தமையே ஆகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நடைபாதைக் கடைகள் சிலாபம் நகரில் அகற்றல்

சிலாபம், ஜூலை 19

சிலாபம் நகரில் நடைபாதைகளில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பெயர்ப்பலகைகளைஅகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நகரில் காணப்படும் வாகன நெரிசல் மற்றும் விபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நடைபாதைகளில் வர்த்தக நிலையப் பெயர்ப்பலகைகளை வைத்திருப்பதனால் பாதசாரிகள் நடைபாதையில் பயணிக்காது பிரதான வீதியில் பயணிக்கின்றனர்.

இதனால் வாகன நெரிசல் அதிகமாக ஏற்படுவதனால் விபத்துக்கள் நடக்கின்றன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் முதலில் வியாபாரிகளுக்கு தெளிவூட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கப்படுவதுடன் அதற்கமைய அவர்கள்செயற்படாவிட்டால் வழக்கு தொடரவுள்ளோம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

*நீர்வீழ்ச்சியில் தவறி வீழ்ந்து*

# காணாமற்போன மாணவன் 3 நாள்களில் சடலமாக மீட்பு



கொழும்பு, ஜூலை 19

நீர்வீழ்ச்சியை பார்வையிடச் சென்று காணாமற்போன களனி பல்கலைக்கழக மாணவன் 3 நாள்களின் பின் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த மாணவன் கடந்த 14 ஆம் திகதி தனது இரு நண்பர்களுடன் அரநாயக்க பகுதியில் உள்ள அசுபினி நீர்வீழ்ச்சியை பார்வையிடச் சென்றுள்ளார்.

நீர்வீழ்ச்சியைப் பார்வையிடச் சென்ற இந்த மாணவன் கால் தவறி நீர்வீழ்ச்சியில் விழுந்து காணாமற் போய் இருந்தார்.

இந்தநிலையில் இந்த மாணவன் நீர்வீழ்ச்சியின் ஓடையில் இருந்து 3 நாள்களின் பின் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

23 வயதுடைய தம்மிக்க சம்பத் குருவிட்டகே எனும் களனி பல்கலைக்கழக மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

**பல்லவர் காலத்தில் பயன்படுத்திய**

# அம்புமுனைகுளம் அணைக்கட்டு புனரமைப்பு

நிலையான அபிவிருத்தி வனஜீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் 3 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட அம்புமுனைகுள அணைக்கட்டடைப் புனரமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் நடராஜா சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்குப் பிரதம அதிதியாக நிலையான அபிவிருத்தி அமைச்சின் கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் மேஜர் தீபக் அல்விஸ், அமைச்சின் மேலதிக செயலாளர் நெவில் பத்மசிறி, மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார், மாவட்ட திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் ஏ.அமிர்தலிங்கம் கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு, முன்னாள் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் மற்றும் மற்றும் மாவட்ட கமநல



அபிவிருத்தித் திணைக்கள உயர் அதிகாரிகள் குடும்பிமலை இராணுவ முகாம் உயர் அதிகாரிகள் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பல்லவர் காலத்தில் மக்களின் விவசாயத் செய்கை மற்றும் குடிதண்ணீர் தேவைக்காக இக்குளம் பயன்படுத்தப்பட்டு வந்தது.

கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தம் காரணமாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்டது. தற்போது இக்குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் 3000ஏக்கரில் நெற்செய்கை பண்ணப்படுவதுடன் 200க்கு மேற்பட்ட விவசாயக்குடும்பங்கள் மற்றும் கால்நடைகள் நன்மையடையவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# நல்லவராகத் தக்கவராக வாழ்ந்த பெருந்தகை



தண்டமிழ் ஆசான் செல்லத்துரை சோதிப் பெருமாள் தன் வாழ்நாளை தக்க முறையில் அனைவரும் பயன் பெறும் வகையில் வாழ்ந்து காட்டியவர். தன் சமூகம் தன்னூரவர் என்று நின்று விடாமல் தன்னையும் நிறுத்தி உலகமுவப்ப வாழ்ந்தவர். சுய நலம் மேலோங்கப் பெற்றவராய்த் தானுண்டு என்று வாழும் இவ்வுலகில் சமூகத்தவர்களுக்காக வாழும் வாழ்வே மகத்தான மானுட வாழ்வு என்று பலரும் உணர வாழ்ந்த பெருந்தகை.

சமூகத் தொண்டனாக நல்லாசிரியனாக நல்ல அதிபராக வாழ்ந்ததோடல்லாமல் சமாதான நீதிவானாக இருந்து மக்களோடு ஒன்றிப் பழகியவர்; உதவியவர். இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கச் செயலாளராக இருந்து சங்கத்தினரும் மானிப்பாய் மக்களும் வியக்கும் வண்ணம் தம் சேவையைச் செய்தார். கொத்தணி அதிபர்கள் சங்கச் செயலாளராக இருந்தவர். இவ்வாறெல்லாம் கல்விச் சேவையில் இருந்ததோடு இணுவில் ஆலய பரிபாலன சபைத் தலைவராக இறக்கும் வரை பணியாற்றியவர்.

சமூக மனித மேம்பாட்டுக்காக, சமூக உணர்வுடன் மனிதாபிமான முறையில் செயலாற்றிய உழைப்பை எவரும் உணர முடியும். மரபு சார்ந்த கல்வியை வளர்த்து வரும் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கப் பொருளாளராக இருபத்திரண்டு ஆண்டுகள் பணி செய்தவர்.

இவர் வடக்கு மாகாணம் முழுவதும் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களைச் சந்தித்து ஜி.சீ.ஈ. சாதாரண தர மாதிரிப் பரீட்சையை எடுக்கச் செய்தமையுடன் பிரவேச பண்டித பரீட்சைக்குத் தோற்ற வழிகாட்டியவர். நூற்றுக்கு மேற்பட்டோர் பிரவேச பண்டித பரீட்சையில் சித்தி பெற்று பால பண்டித பாடங்களைப் படிக்கவும் செய்தவர்.

1999 இல் நடைபெற்ற பரீட்சைக் காலம் நம்மால் மறக்க முடியாத பொற்காலம் இக் காலப் பகுதியில் பதவி வழித் தலைவராக இருந்த கலாநிதி நா.தணிகாசலம் பிள்ளை சங்கத்தினரின் தேவை கருதி வாகன ஒழுங்குகளையும் செய்து கொடுத்தார். இதன் மூலம் கல்வித் திணைக்களத்தின் ஓர் அங்கமாக ஆ.தி.பா.வி. சங்கம் இருப்பதை யாவரும் உணரச் செய்தவர். வடக்குக் கிழக்கு மாகாணச் செயலாளராகப் பதனியில் இருந்த சுந்தரம் டிவகலாலா சங்கத்தின் கீழைத்தேயக் கல்விக் கல்லூரிக்கான கட்டடம் உருவாக நிலத்தை வழங்கினார். அக்கட்டடம் நிறுவர் பலவழிகளிலும் உதவி செய்தவர். சமூகத் தொண்டர் சோதிப் பெருமாள் அவர்கள் இவரே கணக்கு அறிக்கைகளைச் செப்பமுறச் சமர்ப்பித்து பலருடைய பாராட்டுக்களையும் பெற்றவர். இவற்றையெல்லாம் இவரது இன்மை அவரது அருமையை உணர வைத்து எம்மையெல்லாம் அஞ்சலி செலுத்தும் படியாகச் செய்து விட்டது. இவர் போன்ற பெரியோர்கள் நாட்டில் இருக்கின்றமையால், வாழ்ந்து கொண்டிருக்கின்றமையால் நாடு நலங்காணுகின்றதென்பதை நமக்கெல்லாம் உணரும் படிச் செய்து விட்டது.

'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வமும் சேர்வது நாடு' என்பதற்கொப்ப தக்காராக வாழ்ந்து புகழால் நம்மிடையே வாழும் தகுதி பெற்று நிற்கின்றார். அவற்றையெல்லாம் எண்ணுகையில் இத்தகைய புரவலர்கள் நாட்டுக்குத் தேவை அதனால் நாடு நலம் பெறும்.

வாழ்க இவர் புகழ். இவர் போன்றோர் தொண்டு என்றும் தேவையே! என்பதை உணர்ந்து நாமும் உழைப்பதே இவருக்கு நாம் செய்யும் கைம்மாறாகும்.

**பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன்**
**(சங்கப் பொதுச் செயலாளர்)**

# பெறுகை அழைப்பு

## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம் கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு - வாழ்வாதார உதவித்திட்டம்

1. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் **திணைக்களப் பெறுகைக் குழுவின் தவிசாளர்** யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களினால் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்களுக்கு விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரைபொறிக்கப்பட்ட மூடிய விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.

2. இது **தேசிய போட்டி விலைக் கேள்வி முறையாக** இருந்தாலும் **வடக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு** மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

3. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகில் கேள்விபத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

   தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :

   021 221 4633/ 021 222 2233, 2234 (Ext. – 140) Facsimile – 021 222 3674

4. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழ் பிரதியையும் சமர்ப்பிக்க வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாகிய **( Non Refundable fee )** அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை **மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுகை அலகு அலுவலகத்தின் மூலம்** செலுத்தி பற்றுச் சீட்டைசமர்ப்பித்து **19.07.2018 தொடக்கம் 02.08.2018 வரைமு.ப 9.00** மணியிருந்து **பி.ப 02.30** மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

5. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித் தொகைகளுக்கான கேள்விப்பிணைப் பொறுப்பு கேள்விகளுடன் இணைக்கப்பட்டு **தவிசாளர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **03.08.2018 பி.ப 02.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வி இலக்கத்தினையும் **(Bid ID)**, பொருள் விபரத்தினையும் குறிப்பிடல் வேண்டும். கேள்விகள், சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

6. விலைக் கேள்வி செல்லுபடிக் காலம் கேள்வி இறுதித் திகதியிலியிருந்து அல்லது நீடிக்கப்படும் திகதியிலிருந்து **(Bid Valid)** 90 நாட்களும், கேள்விப் பிணைப்பொறுப்பு **(Bid Security)** கேள்விதிறத்தல் திகதியிலிருந்து **120நாட்களும** ஆகும்.

7. முற்கேள்விக் கூட்டம் **(Prebid Meeting)** 25.07.2018 மு.ப 10.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறும்.

8. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

9. அட்டவணை கீழ்வருமாறு: -

| | BID ID | Category of Items | Bid Security Rs. | Bid Security Validity Period Until | Non Refundable fund Rs. |
|---|---|---|---|---|---|
| 01 | JK/PROC/Tools/Alufit /01/2018 | **Aluminiyam fitting& Welding Work Equipments& Tools** (அலுமினிய பொருத்துக்கள் மற்றும் வெல்டிங் வேர்க் உபகரணங்கள், கருவிகள்.) | **50,000** | **01.12.2018** | **1000** |
| 02 | JK/PROC/Tools/Tailor/ 02/2018 | **Sewing Mechines, TailiringEquipments& Tools** (தையல் இயந்திரங்கள் மற்றும் தையல் வேலைக்கான உபகரணங்கள், கருவிகள்) | **100,000** | **01.12.2018** | **1000** |
| 03 | JK/PROC/Furniturewood /03/2018 | **Furnitures- Wooden** (மரத்தளபாடங்கள்) | **50,000** | **01.12.2018** | **1000** |
| 04 | JK/PROC/Furnituresteel /04/2018 | **Furnitures- Plastics & Steel** (பிளாஸ்டிக் மற்றும் இரும்பிலான தளபாடங்கள்) | **50,000** | **01.12.2018** | **1000** |
| 05 | JK/PROC/Tools/Mason/ 05/2018 | **Masonry Equipments&Tools** (மேசன் உபகரணங்கள்,கருவிகள்) | **75,000** | **01.12.2018** | **1000** |
| 06 | JK/PROC/Tools/Food/ 06/2018 | **Food ProcessingEquipments& Tools** (உணவு உற்பத்திக்கான உபகரணங்கள், கருவிகள்) | **50,000** | **01.12.2018** | **1000** |
| 07 | JK/PROC/Tools/Carpent/ 07/2018 | **Carpentry Equipments&Tools** (தச்சு வேலைக்கான உபகரணங்கள், கருவிகள்) | **50,000** | **01.12.2018** | **1000** |
| 08 | JK/PROC/Tools/Agri/ 08/2018 | **Agriculture Equipments&Tools** (விவசாய உபகரணங்கள், கருவிகள்) | **75,000** | **01.12.2018** | **1000** |
| 09 | JK/PROC/Tools/Fish/ 09/2018 | **Fisheries Equipments& Tools** (மீன்பிடி உபகரணங்கள், கருவிகள்) | **50,000** | **01.12.2018** | **1000** |

நா.வேதநாயகன்,
அரசாங்கஅதிபர்/ மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்

**உலகின் மகோன்னத தலைவரான நெல்சன் மண்டேலாவின் பிறந்த தினம் நேற்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகின்றது.**

# சரித்திர நாயகன் நெல்சன் மண்டேலா



நிறவெறிக்கு எதிராகப் போராடிய உலகின் முக்கிய தலைவர்களுள் ஒருவரும், தென்னாபிரிக்காவில் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவருமான நெல்சன் மண்டேலாவின் பிறந்த தினம் நேற்று உலகமெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது. மண்டேலாவின் பிறந்த தினத்தை 'மண்டேலா தினம்' என்று ஐ.நா பிரகடனப்படுத்தியிருந்தது.

ஆரம்பத்தில் அறப்போர் (வன்முறையற்ற) வழியில் நம்பிக்கை கொண்டிருந்த இவர், பின்பு ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் இராணுவப் பிரிவுக்குத் தலைமை தாங்கினார்.

இவர்கள் மரபுசாரா கெரில்லாப் போர் முறைத் தாக்குதலை நிறவெறி அரசுக்கு எதிராக நடத்தினர். மண்டேலாவின் 27



ஆண்டு சிறைவாசம், நிறவெறிக் கொடுமையின் பரவலாக அறியப்பட்ட சாட்சியமாக விளங்குகிறது.

சிறையின் பெரும்பாலான காலத்தை இவர் ராபன் தீவில் சிறிய சிறை அறையில் கழித்தார். 1990இல் அவரது விடுதலைக்குப் பிறகு அமைதியான முறையில் புதிய தென்னாபிரிக்கக் குடியரசு மலர்ந்தது. மண்டேலா, உலகில் அதிகம் மதிக்கப்படும் தலைவர்களில் ஒருவராக போற்றப் படத் தொடங்கினார்.

**அடக்குமுறைக்கு எதிராக துணிந்து போராடி உலகையே திகைக்க வைத்த பெருமகன்**

தென்னாபிரிக்காவை மக்களாட்சியின் மிளிர்வுக்கு இட்டுச் சென்றவர். அமைதி வழிப்போராளியாக, ஆயுதப் போராட்டத் தலைவனாக, தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளியாக, 27 ஆண்டுகள் சிறையில் வாடி பின்னர் விடுதலையாகி குடியரசுத் தலைவராக, அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவராக இவரின் அரசியல் பயணம் தொடர்ந்தது. 2008 ஆம் ஆண்டு ஜுன் மாதம் பொது வாழ்க்கையிலிருந்து விலகுவதாக மண்டேலா அறிவித்தார்.

உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் 2013 ஜுன் மாதம் 8 ஆம் திகதி மண்டேலா பிரிட்டோரியாவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

நெல்சன் மண்டேலாவின் நெருங்கிய உறவினர்கள் அனைவரும் பூர்வீக வீட்டிற்கு அவசரமாக வரவழைக்கப்பட்டனர். அவர்கள் மண்டேலா நலமடைந்து வீடு திரும்ப பிரார்த்தனை நடத்தி வந்த நிலையில் 5 ஆம் திகதி டிசம்பர் 2013 அன்று தனது 95 ஆவது அகவையில் அவர் காலமானார்.

1993ல் உலக அமைதிக்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது. அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான 'மகாத்மா காந்தி சர்வதேச விருது' நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. உலக சமாதானத்துக்காக மண்டேலா ஆற்றிய சேவைகளைப் பாராட்டி அவர் சிறையில் இருக்கும்போதே இந்திய அரசு 'நேரு சமாதான விருது' வழங்கியது. கணவர் சார்பில் வின்னி டெல்லிக்கு வந்து அந்த விருதைப் பெற்றார். 1990 இல் இந்தியாவின் 'பாரத ரத்னா' விருதும் வழங்கப்பட்டது. நெல்சன் மண்டேலா ஒருவருக்கு மட்டுமே இந்தியர் அல்லாத ஒருவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.

நெல்சன் மண்டேலாவின் பிறந்த நாளான ஜுலை 18 ஆம் திகதியை சர்வதேச நெல்சன் மண்டேலா தினமாக ஐ.நா அறிவித்திருந்தது.

ரசிகர்கள், அரசியல்வாதிகள் மற்றும் ஆயிரக்கணக்கான பிரபலங்கள் முன்னிலையில், சேர் வின்ஸ்டன் சேர்ச்சில் மற்றும் ஆபிரகாம் லிங்கன் அருகில் நெல்சன் மண்டேலாவின் வெண்கல சிற்பம் 30 ஒகஸ்ட் 2007 இல் இங்கிலாந்து நாடாளுமன்ற சதுக்கத்தில் வைக்கப்பட்டது.

நெல்சன் மண்டேலா பற்றிய அரிய முத்துக்கள் சில வருமாறு:

தென்னாபிரிக்காவின் குலு என்ற கிராமத்தில் பிறந்தார் (1918). தந்தை, சோசா பழங்குடி இன மக்களின் தலைவர். 9ஆவது வயதில் தந்தை காலமானார். அந்தக் குடும்பத்தில் முதன்முதலில் பாடசாலை சென்றவர் இவர்தான். இவர் முதலில் படித்த பாடசாலையில் இவருக்கு 'நெல்சன்' என்று பெயர் சூட்டப்பட்டது.

லண்டன், தென்னாபிரிக்கா பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். சட்டக் கல்வியும் பயின்றார். கறுப்பின மக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக உருவான ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் இணைந்து, அதன் தலைவரானார். இனவாதக் கொள்கைகளுக்கு எதிராக அறப் போராட்டங்களை நடத்தியமையால், அரசு இவரைக் கைது செய்தது. 4 ஆண்டு விசாரணைக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார்.

அறப் போராட்டத்தை அரசு இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கியது. இதனால் அறப்போராட்டத்தைக் கைவிட்டு ஆயுத வழிமுறையை நாடினார். 1961இல் இந்த இயக்கத்தின் ஆயுதப்படைத் தலைவராக உருவெடுத்தார். ஆதரவு நாடுகளின் உதவியுடன் கொரில்லா தாக்குதல்களை நடத்தினார்

இவர்மீது மனிதஉரிமை மீறல்கள் குற்றம் சாட்டப்பட்டது. அமெரிக்காவும் இவர் மீது பயங்கரவாத முத்திரையைக் குத்தியது. 1962இல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 1964 இல் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது இவருக்கு வயது 46. சிறைவாசம் 27 ஆண்டுகள் நீடித்தது

இவ்வளவு நீண்ட சிறைத்தண்டனையை உலகில் எந்தத் தலைவரும் அனுபவித்தது கிடையாது. 1988இல் கடுமையான காசநோய் தாக்கியும் விடுதலை செய்யப்படவில்லை. 'மன்னிப்புக் கேட்டால் விடுதலை செய்கிறோம்' என்ற அரசின் நிபந்தனையை நிராகரித்தார்.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய அரசு பதவியேற்றது. புதிய அரசு இவருடன் பேச்சுவார்த்தை நடத்தியது. தென்னாபிரிக்கா ஒரு மக்களாட்சி நாடாகப் பின்னர் மலர்வதற்கு இந்தப் பேச்சுவார்த்தைகள் முக்கிய பங்கு வகித்தன. இறுதியில் 1990 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். அப்போது இவருக்கு வயது 71.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் நாட்டு விடுதலைக்காகவும் தொடர்ந்து போராடினார். இறுதியில் 1994இல் நாடு விடுதலை அடைந்தது. தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதியானார். 1999 இல் பதவியை விட்டு விலகிய இவர், 2ஆவது முறை போட்டியிட மறுத்து விட்டார்.




அடக்குமுறையாளர்களுக்கும் அடக்கப்பட்டவர்களுக்கும் இடையே நல்லிணக்கம் ஏற்படும் பல்வேறு முனைப்புகளில் ஈடுபட்டார். உண்மை மற்றும் சமாதான ஆணையத்தை (Truth and Reconciliation Commission) அமைத்தார். உலக வரலாற்றில் இந்த முனைப்பு ஒரு சிறந்த முன்மாதிரியாக கருதப்படுகிறது.

இவர் உலகம் முழுவதும் 250இற்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ளார். நிறவெறிக்கு எதிரான போராட்டங்களுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த நெல்சன் மண்டேலா, 2013 ஆம் ஆண்டு தனது 95 ஆவது வயதில் காலமானார்.








வடமாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினின் பிரமாண அடிப்படையிலான நிதியொதுக்கீட்டில் யாழ். ஜே/87, 88, ஜே/90 ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் வீட்டுத் திருத்த பயனாளிகளுக்கு கட்டடப் பொருள்கள் யாழ். மாநகர சபை வளாகத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்ட போது. (இ-19)




# கல்விக் கதிர் வெளியீடு 06

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

### பகுதி - II

11.வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான முடிக்கும் சொல்லை அடைப்புக்குள்ளிலிருந்து தெரிவு செய்து கோடிடுக.

1. கோழிகள் குப்பைகளைக் ................................................(கிளறியது,கிளறின)

2. விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் திங்கட்கிழமை .................................... (ஆரம்பமாகின, ஆரம்பமாகும்)

3. நாங்கள் தினமும் காலையில் பால் .................................. (குடித்தோம்,குடிப்போம்)

4. அந்த ஓவியங்கள் யாவும் கண்களுக்கு விருந்தளிப்பவையாக ...................... (இருந்தது, இருந்தன)

10, 11 ஆகியவினாக்களில் தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் தெரிவு செய்து கோடிடுக.

12.There …………………..(is/are) forty children in my class

13.What are ……………………………….? (this/these)

14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
நான் குளிக்கின்றேன் ..............................................................................

15. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.
மமபாடம் கறனவா ..............................................................


16. புத்தகப்படிப்பினால் மட்டும் ஒருவர் அறிவை பெற்றுவிட முடியாது. அனுபவம் மூலம் பெறும் கல்வியே சிறந்தது. புதிய அனுபவங்களைப் பெறுவதற்காக பயனுள்ள கல்விச் சுற்றுலா ஒன்றில் கலந்து கொண்டேன் என்னும் தலைப்பில் மூன்றுவாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களிற்கு மேல் இடம் பெறவேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்கவேண்டும்)

1. ...................................................................................................
2. ...................................................................................................
3. ...................................................................................................

தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடையை எழுதுக.

17.1. 12 ட 750 mlI மில்லி லீற்றரில் எழுதுக. ...................................... ml
2. 240 ml மீற்றர் சென்ரி மீற்றரில் எழுதுக. m..................................cm

18. உருவில் காணப்படும் திண்மத்தில் உள்ள




1. தட்டையான மேற்பரப்புக்கள் எத்தனை? ..
2. அவ்வெண்ணை எழுத்தில் எழுதுக? .

19. தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துக்களில் எழுதுக
5067 ..............................................................................................

20.தரப்பட்டுள்ள உரோமன் எண்ணிற்கு அடுத்து வரும் உரோமன் எண்ணை எழுதுக.
XIX ..............................................................................................

21. தரப்பட்டுள்ள எண் கோலத்திற்கேற்ப அடுத்து வரும் எண்ணை எழுதுக
145, 135, 125,115 .................................................................................


22.இதில் 1/2 வாசியை நிழற்றுக.




23.19. 20,25,30,35 ................................................ அடுத்து வரும் எண் யாது?

24. 30/100ஐ தசமமாக எழுதினால் வரும் விடை யாது?
..........................................................................................

25. இவ் உருவில் எத்தனைசெங்கோணங்கள் உள்ளன.
............................................................................




26. தரப்பட்டுள்ள உருவில் செங்கோணத்தை காட்டும் ஆங்கில எழுத்துக்கள் எவை?
............................................................







## 5 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்



## நிறம் தீட்டுங்கள்



## மூத்தோர் சொல் மதிப்போம்



ஒரு பெரிய மரத்தினடியில் பாம்பு புற்று ஒன்று இருந்தது. அம்மரத்தில் காகம் ஒன்று கூடு கட்டி குஞ்சு பொரிக்க எண்ணியது.

அப்போது ஒரு மூத்த காகம் ஒன்று...' அந்த மரத்தினடியில் பாம்பு புற்று இருக்கிறது.ஆகவே அம்மரத்தில் கூடு கட்டாதே' என்றது. ஆனால் மற்ற காகம் அதைக் கேட்கவில்லை.' அடுத்த நாள் கூட்டினுள் முட்டையிட்டுவிட்டு காகம் உணவிற்காக வெளியே சென்றது.

காகம் இல்லாத நேரம் பொந்திலிருந்து ...பாம்பு ஒன்று மரத்திலேறி கூட்டினுள் இருந்த முட்டையைத் தின்றுவிட்டது. வழக்கமாய் இது நடந்து கொண்டிருந்தது.அப் போதுதான் மூத்த காகத்தின் புத்திமதியை தான் கேட்கவில்லை என நினைத்தது.

உடன் அதனிடம் சென்று நடந்ததைக் கூறி....ஆலோசனைக் கேட்டது. மூத்த காகம் ...' நான் அப்போதே கூறினேன் நீதான் கேட்கவில்லை ..சரி... இதற்கு ஒரு வழி பண்ணுகிறேன் என்று சொல்லிவிட்டு....அந்த நாட்டு ராணி குளிக்கும் தடாகத் திற்குச் சென்றது.

ராணி தன் முத்துமாலையைக் கழற்றி கரையில் வைத்துவிட்டு குளிக்கச் சென்றாள். மூத்த காகம் அந்த மாலையை எடுத்துக்கொண்டு பறந்தது. ராணி கூச்சலிட, வெளியேயிருந்த சேவகர்கள் உடனே காகத்தின் பின்னே ஓடினர். மூத்த காகம் மரத்தினடியில் வந்து மாலையை புற்றினுள் போட்டது. வந்த சேவகர்கள் பாம்பு புற்றை வெட்டினர். மாலையை எடுக்கும்போது பாம்பு வெளியே வந்தது. அதையும் வெட்டிக் கொன்றனர்.

அதற்கு பின் காகம் இடும் முட்டைகள் திருட்டு போகாமல் குஞ்சுகளாக வெளியே வந்தன. நாமும் நம்மைவிட அனுபவசாலிகள் கூறும் அறிவுரையைக் கேட்டு நடந்தால் நமக்கும் நல்லதே நடக்கும்.

# கேரள கஞ்சா கடத்தல் தொடர்பில் இந்தியாவுடன் பேச்சு



இலங்கைக்கு இந்தியாவிலி ருந்து கேரள கஞ்சா கடத்தப்படுவது அதிகரித்துள்ளதை தொடர்ந்து இதனை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை, இந்தியாவுடன் பேச்சு களை மேற்கொள்ளவுள்ளது.

சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார இதனை தெரிவித்துள்ளார்.

கேரளகஞ்சா கடத்தப்படுவதை தடுப்பதற்காக இந்திய சட்ட அமு லாக்கல் அதிகாரிகளின் உதவியை பெறும் நோக்கில் இந்தியாவுடன் பேச்சுகள் இடம்பெறும் என அமைச் சர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 4660 கிலோ கஞ் சாவை கைப்பற்றினோம், இவற் றில் பெரும்பாலானவை கேரள கஞ்சா என அமைச்சர் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில 25 ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அமைச்சர் தெரிவித்துள் ளார்.

வடபகுதி கடல் ஊடாக கேரள கஞ்சா இலங்கைக்குள் வருகின் றது. யாழ்ப்பாணமே இதன் கார ணமாக மோசமாக பாதிக்கப் பட்டுள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அதிகாரிகளின் உத வியை பெறுவதற்காக அவர்களு டன் பேச்சுகளை மேற்கொள்ளவுள் ளோம், கடத்தல் தொடர்பான எங்கள் விசாரணைகளுக்கு சாட்சியங்கள் அவசியமாகவுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க)

# மன்னார் 'சதொச' நிலைய வளாகத்தில் அணைத்தபடி இரு மனித எச்சங்கள்



நேற்றைய அகழ்வின்போது மீட்பு

மன்னார் 'சதொச' விற்பனை நிலைய வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் பல்வேறு சந்தே கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள இரு மனித எச்சங்கள் ஒன்றாக காணப்பட்டமை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வளாகத்தில் நேற்றுமுன்தினம் மாலை மற் றும் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட புதைகுழி அகழ்வில் தற்போது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தும் விதமாக மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

மனித எச்சங்கள் மீட்கப்பட்டமையைத் தொடர்ந்து அந்த வளாகத்தை விரிவுபடுத்தி அகழ்வு செய்யும் பணி இடம்பெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் அகழ்வுப் பணிகள் இடம் பெற்ற புதிய இடத்திலும் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதுவரைக்கும் 40 இற்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகளும் மண்டையோடுகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என் றும் 27 எலும்புக்கூடுகளும் மண்டையோடுகளும் வெளியேற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பெண்கள் கைக்கு அணியக்கூடிய காப்பு என சந்தேகிக்கப்படுகின்ற தடயப் பொருள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதோடு ஒருவரை ஒருவர் அணைத்தவாறு அருகருகே இரு மனித எச்சங்கள் ஒன்றாக காணப் பட்டமை அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

# மலவாயிலில் மறைத்து தங்கம் கடத்திய 4 இந்தியர்கள் கைது!

மிகவும் சூட்சுமமான முறையில் மலவாயிலில் மறைத்து வைத்து சட்டவிரோதமான முறையில் தங்கத் துண்டுகளை கடத்திச்செல்ல முற்பட்ட இந்திய பிரஜை கள் நால்வரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத் தில் வைத்து சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

இந்த நபர்கள் நேற்று அதிகாலை இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு இந்த தங்கத் துண்டுகளை கடத்திச்செல்ல முற்படுகையிலேயே கைது செய்யப் பட்டுள்ளனர்.


இந்த நபர்களின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த விமான நிலைய சுங்க அதிகாரிகள், அவர்களை சோதனை செய்தபோது மலவாயிலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 12 தங்கத் துண்டுகளைக் கைப்பற்றி யுள்ளனர்.

சந்தேக நபர்கள் இந்தியாவின் தமிழகத்தை சேர்ந்த 24, 32, 25, 26 வயதுடைய நபர்களென அதிகாரி கள் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து சுமார் 15 இலட்சம் ரூபா பெறு மதியான 235.91 கிராம் நிறையுடைய 12 தங்கத் துண் டுகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

### கிளிநொச்சி மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின்

# விசாரணைக்குட்பட்ட கட்டடத்தை பூசி மெழுகும் செயற்பாடு நிறுத்தம்



கிளிநொச்சி, ஜுலை 19

புதிதாக அமைக்கப்பட்டு கடந்த 12 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட கிளிநொச்சி மாற்று வலுவுள் ளோர் சங்க கட்டடத்தின் தரம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில் இந்த கட்டடத்தின் வெடிப்பு பகுதிகளை ஒப்பந்தகாரர்கள் பூசி மெழுகும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்த நிலையில் அது நிறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் புதிய கட்டடம் கட்டுமான பணிகளின் தரம் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மாகாண சமூக சேவைகள் பணிப்பாளருக்கு பணித்திருந்த நிலையில் இந்த கட்டடத்தின் வெடிப்புக்களை ஒப்பந் தகாரர்கள் பூசி மறைக்கும் செயற்பாட்டினை மேற் கொண்ட நிலையில் அந்த வேலைகள் தடுத்து நிறுத் தப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பசுபதி பிள்ளை தவநாதன் ஆகியோரின் இருபது லட்சம் ரூபா நிதியிலும், மாகாண சபை உறுப்பினர் அரியரத்தினத் தின் இரண்டு லட்சம் ரூபாவுமாக 42 லட்சம் ரூபா அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தின் பல பகுதிகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதோடு, 42 லட்சம் ரூபா பெறுமதியில் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது இது தொடர்பில் மாகாண சபை உறுப்பினர் பசுபதிபிள்ளை மற்றும் மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தமையை அடுத்து முதலமைச்சர் மேற்படி பணிப்புரையை வழங்கிய நிலையிலேயே இந்த திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டபோது அது தடுக் கப்பட்டுள்ளது. (க - 70)

# பொகவந்தலாவ - லொய்னோன் தோட்ட 25 வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு



கண்டி, ஜுலை 19

பொகவந்தலாவ லொய்னோன் தோட்டத் தில் நிர்மாணிக்கப்பட வுள்ள 25 தனி வீடுக ளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு மலைநாட்டு புதிய கிராமங்கள், உட் கட்டமைப்பு வசதிகள் மற் றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம் பரம் தலைமையில் நடை பெற்றது.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்ட மைப்பு வசதிகள் மற்றும் சமூகஅபிவிருத்திஅமைச் சின் நிதியுதவியுடன் இந்த நிகழ்வு இடம்பெற் றது.

இந்த நிகழ்வில் மத் திய மாகாண சபை உறுப் பினர்களான சோ. ஸ்ரீத ரன், சிங். பொன்னையா, 'டஸ்ட்'நிறுவனத்தின்தலை வர் வீ. புத்திரசிகாமணி, சங்கத்தின் பொதுச் செய லாளர் எஸ். பிலிப், தேசிய அமைப்பாளர்ஜி.நகுலேஸ் வரன்உட்படபலமுக்கியஸ் தர்களும் கலந்து கொண் டார்கள்.

# கிழக்கு ஆளுநரின் அலுவலகத்தை முற்றுகையிட்ட தொண்டராசிரியர்கள்

நிரந்தர நியமனத்தை உடனடியாக வழங்கு மாறு கோரி தொடர்ந்து மூன்றாவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கிழக்கு தொண்டரா சிரியர்கள் நேற்று ஆளுநரின் அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ளனர்.

கிழக்கு ஆளுநர் அலுவலகத்தின் பிரதான வாயிற் கதவை மூடியவாறு இந்த தொண்டரா சிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றைய தினம் ஆளுநர் அலுவலகத்தில் மக்கள் சந்திப்பு நடைபெறவிருந்த நிலையில், மக்களை உள்ளே வர விடாமலும், உள்ளிருந்து யாரும் வெளியே செல்ல முடியாமலும் போராட் டத்தை முன்னெடுத்தனர்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட தொண்டராசிரியர்கள் 456 பேருக்கும் நிரந்தர நியமனத்தை உடனடியாக வழங்குமாறு கோரி கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் கிழக்கு தொண்ட ராசிரியர்கள் நேற்றுடன் மூன்றாவது நாளாக வும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மேலும், நிரந்தர நியமனம் வழங்கும் திக தியை அறிவிக்கும் வரை போராட்டத்தில் ஈடுபட போகிறோம் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர் கள் குறிப்பிட்டுள்ளனர்.

# அனைத்துப் பட்டதாரிகளுக்கும் அடுத்த ஆண்டுக்குள் வேலைவாய்ப்பு

கொழும்பு, ஜுலை 19

தொழில் அற்ற அனைத்து பட்டதாரிகளுக்கும் தொழில் வாய்ப்பை வழங்க அரசு நடவ டிக்கை எடுக்கும் என இராஜாங்க அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நான்கு கட்டங்களின் கீழ் இந்த வருடமும், அடுத்த வருட மும் தொழில்வாய்ப்பு வழங்கப் படும் என்று அவர் நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் தெரி வித்தார்.

இந்த மாதம் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பட்டப் படிப்பை பூர்த்திசெய்துள்ள வர்களுக்கு தொழில் வழங்கப் படும்.

ஆட்சேர்ப்பின் வயதெல்லை 35 வயதாக இருந்த போதிலும், அமைச்சரவையின் அனுமதியு டன் இந்த வயதெல்லை 45 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரி வித்தார். (க)

# கலால் குற்றங்கள் சம்பந்தமாக 6 மாதங்களில் 25,214 பேர் கைது!

இந்த அண்டின் கடந்த 06 மாத காலத்தில் கலால் குற்றங்கள் சம்பந் தமாக 25,214 பேர் கைது செய்யப்பட் டிருக்கின்றனர் என கலால் திணைக் களம் கூறியுள்ளது.

சுமார் 1000 கலால் திணைக்கள அதிகாரிகள் நடத்திய சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்ட னர் என அந்த திணைக்களம் கூறியுள் ளது.

கைது செய்யப்பட்டவர்களில் சட்டவிரோதமான முறையில் மதுபான தயாரிப்பு மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டமை சம்பந்தமாக 19,145 பேரும் அடங்குகின்றனர் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் உட்பட போதைப் பொருள்களை உடைமையில் வைத் திருந்தமை சம்பந்தமாக 3081 பேரும் புகையிலை சம்பந்தமான குற்றச் சாட்டில் 3463 பேரும் கைது செய் யப்பட்டுள்ளனர் என்றும் கலால் திணைக்களம் கூறியுள்ளது.

அதேநேரம் கலால் அனுமதிப்பத்தி ரம் பெற்ற இடங்களில் இடம்பெற்ற குற்றங்களிலும் சிலர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்தக் குற்றங்கள் குறைவாகவே பதிவாகியிருக்கின்றன என அந்தத் திணைக்களம் மேலும் கூறியுள்ளது. (க)

# அமெ. பொருளாதாரத் தடைகளை எதிர்த்து சர்வதேச நீதிமன்றத்தில் ஈரான் முறையீடு!

அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறிய பின்னர் ஈரான் மீது அமெரிக்கா பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இதை எதிர்த்து சர்வதேச நீதிமன்றத்தில் ஈரான் வழக்குத் தொடர்ந்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஈரான் கடந்த 2015 ஆம் ஆண்டு அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய வல்லரசு நாடுகளுடன் வரலாற்று சிறப்பு வாய்ந்த அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டது.

ஈரான் அணு ஆயுத திட்டங்களை செயல்படுத்துவதை முடிவுக்கு கொண்டு வர வேண்டும், அதற்கு பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடைகளை மேற்கத்திய நாடுகள் படிப்படியாக விலக்கிக்கொள்ள வேண்டும் என்பது இந்த ஒப்பந்தத்தின் சாராம்சம். இந்த ஒப்பந்தம் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டதாகும்.

இதற்கிடையே, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தைக் கைவிட்டு அமெரிக்கா வெளியேறுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த மே மாதம் அறிவித்ததோடு மட்டுமல்லாமல் அந்தநாட்டின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளையும் விதித்தார்.

மேலும், இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதை எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் முழுவதுமாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருகிறது.

இந்நிலையில், அணு ஆயுததவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிய பிறகு ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள பல்வேறு பொருளாதாரத் தடைகளை எதிர்த்து சர்வதேச நீதிமன்றத்தில் ஈரான் வழக்குத் தொடர்ந்துள்ளது.

இதுகுறித்து டுவிட்டரில் கருத்து பதிவிட்டுள்ள ஈரான் வெளியுறவுஅமைச்சர் முகமது ஜாவித் ஜரிப், 'ஈரானுடனான உறவு மற்றும் சட்டபூர்வமான கடமைகளை அமெரிக்கா அவமதித்துவிட்டது. இவ்விவகாரத்தை நாங்கள் சட்டபூர்வமாக எதிர்கொள்ள உள்ளோம்' எனத் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கின் மீதான விசாரணை வரும் ஒக்டோபர் மாதம் மேற்கொள்ளப்படும் என சர்வதேச நீதிமன்றம் அறிவித்துள்ளது. எனினும், எந்த திகதியில் இருந்து விசாரணை தொடங்கும் என்பதை தெரிவிக்கவில்லை.

## பீப்பாய் குண்டு வீச்சு: சிரியாவில் 10 பேர் பலி



டமாஸ்கஸ், ஜூலை 19

சிரியாவில் எயின் அல் டினே கிராமத்தின் மீது பீப்பாய் குண்டு போடப்பட்டது என்றும் அதில் சிக்கி 10 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரியாவில் ஜனாதிபதி பார் அல் ஆசாத் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்கள் படைகளுக்கும் கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி உள்நாட்டுப்போர் மூண்டது. தொடர்ந்து 8 ஆவது ஆண்டாக அந்தப் போர் நீடித்து வருகிறது.

இந்த நிலையில் சிரியாவின் தென் மேற்கு பகுதியில் கிளர்ச்சியாளர்கள் பிடியில் உள்ள ஒரு கிராமத்தின் மீது ரஷ்யாவின் துணையுடன் அதிபர் ஆதரவு படைகள் நேற்றுமுன்தினம் குண்டுவீச்சில் ஈடுபட்டன.

இந்தக் குண்டுவீச்சில் 6 பேர் பலியாகினர் என சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறுகிறது.

ஆனால் அங்கு இயங்கி வரும் ஒரு மருத்துவ அறக்கட்டளை, எயின் அல்டினே கிராமத்தின் மீது பீப்பாய் குண்டு போடப்பட்டு என்றும் அதில் சிக்கி 10இற்கும் மேற்பட்டோர் பலியாகினர் என்றும் கூறுகிறது.

பலியானவர்களில் பெரும்பாலோர் பெண்கள், குழந்தைகள் என கூறப்படுகிறது. 35 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

அண்டை கிராமங்களில் ஜனாதிபதி ஆதரவு படைகள் கடும் தாக்குதலில் ஈடுபட்டமையைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து எயின் அல் டினே கிராமத்துக்கு வந்த மக்கள்தான் பீப்பாய் குண்டுவீச்சில் சிக்கிக்கொண்டனர் என்று அந்த தகவல்கள் மேலும் கூறுகின்றன.

## சிரியா முகாம்கள் மீது ரஷ்யா தாக்குதல்; 10 பேர் உயிரிழப்பு

சிரியா முகாம்களின் மீது ரஷ்யப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் பொதுமக்கள் 10 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

இதுகுறித்து போரில் பாதிக்கப்படும் சிரிய மக்களுக்குக்கான உதவும் அமைப்பு ஒன்று கூறும் போது –

சிரியாவின் தென்மேற்குப் பகுதியில் சிரிய அரசுப் படைகள் மற்றும் ரஷ்யப்படைகளின்தாக்குதல்காரணமாக தங்கள் இருப்பிடத்திலிருந்து சிரியாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள ஜன் எல் – தினா கிரா மத்திலுள்ள ஒரு பள்ளியிலுள்ள முகாம்களில் மக்கள் தங்கியுள்ளனர்.

அங்கு ரஷ்யப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் 10 பேர் பலியாகினர். 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் ஷியா பிரிவைச் சேர்ந்த ஜனாதிபதி ஆசாத்துக்கும் சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே 6 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நடைபெறுகிறது. ஜனாதிபதி ஆசாத்துக்கு உதவியாக ரஷ்யப் படைகள் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

மேலும்,இரசாயனஆயுதங்களை அழிப்பதற்காக, அமெரிக்க ராணுவத்தினர் கடந்த 3 மாதங்களாக அங்கு முகாமிட்டுள்ளனர். மேலும், அந்நாட்டில் உள்ள இரசாயன ஆலைகள், ஐ. எஸ். தீவிரவாத முகாம்கள் மீதும் அமெரிக்கப் படையினர் அவ் வப்போது வான்வழித் தாக்குதல்களை நிகழ்த்தி வருகிறார்கள். இதில் ஏராளமான அப்பாவி மக்களும் பலியாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய உளவாளியாக நடித்த பெண் அமெரிக்காவில் கைது

அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரத்துக்கு ஆதரவான அமைப்பினருடன் தொடர்புகளை ஏற்படுத்தி, ரஷ்ய உளவாளியாக நடித்த பெண்ணை வொஷிங்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரஷ்யா நாட்டை சேர்ந்தவர் மரியா புட்டினா (வயது 29). அமெரிக்காவுக்கு வந்து அமெரிக்க பல்கலைக் கழகத்தில் பயின்று வந்த மரியா, ரஷ்யா நாட்டின் துப்பாக்கி வைத்திருக்கும் உரிமைகளுக்காக போராடும் அமைப்பின் நிறுவுநராகவும் உள்ளார்.

இந்தநிலையில், வொஷிங்டன் மற்றும் நியூயோர்க் நகரில் அமெரிக்க அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரசு உயரதிகாரிகளுக்கு மிகப்பெரிய விருந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, மெல்லமெல்ல பிரபலமடைந்த மரியா, தன்னை ரஷ்ய அரசின் உளவாளியாக சிலரிடம் அறிமுகம் செய்துகொண்டார்.

பல்வேறு பிரபலங்களுடன் இருக்கும் புகைப்படங்களை தனது பேஸ்புக் பக்கத்தில் அடிக்கடி பதிவிட்டு வந்த மரியா, அமெரிக்க அரசின் நிதித்துறை அமைச்சகத்தின்கீழ் இயங்கிவரும் வெளிநாட்டு சொத்துகள் கட்டுப்பாட்டு துறையால் தடைவிதிக்கப்பட்ட அலெக்ஸான்டர் டோர்ஷின் என்பவருடன் மிகவும் நெருக்கமாக இருந்துள்ளார்.

ரஷ்ய மத்திய வங்கியின் துணைத் தலைவரான அலெக்ஸான்டர் டோர்ஷின் ஆலோசனைப்படியும், அவரது திட்டப்படி அதிகாரத்தில் உள்ள சிலரை வளைத்துப்போட்டு அமெரிக்க அரசின் தேசிய முடிவுகளில் தலையீடு செய்யவும், குறிப்பாக, அமெரிக்க அரசின் துப்பாக்கி கட்டுப்பாட்டுச் சட்டத்தை தளர்த்தவும் மரியா புட்டினா முயன்று வந்துள்ளார்.

இவரது நடவடிக்கைகளை மோப்பம் பிடித்த அமெரிக்க உளவுப்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரைக் கைது செய்தனர்.

அலெக்ஸான்டர் டோர்ஷின் மட்டுமின்றி மரியாவுடன் அமெரிக்காவை சேர்ந்த இருவருடனும், துப்பாக்கி கட்டுப்பாட்டுச்சட்டத்துக்கு எதிரான அமைப்பினருடனும் தொடர்பு இருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

## அடுக்குமாடி குடியிருப்பில் அந்தரத்தில் தொங்கியபடி உயிருக்கு போராடிய 5 வயதுச் சிறுவனால் பரபரப்பு!

பெய்ஜிங், ஜூலை 19

சீனாவில் அடுக்குமாடி குடியிருப்பின் 19 ஆவது மாடியில் இருந்து தவறி விழுந்த 5 வயது சிறுவன், உயிருக்கு போராடிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் ஷென்ஷென் மாகாணத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் தனது பாட்டியுடன் 5 வயது சிறுவன் வசித்து வந்துள்ளான். அடுக்குமாடி குடியிருப்பின் 19 ஆவது மாடியில் தூங்கிக் கொண்டிருந்த சிறுவனை விட்டுவிட்டு, சிறுவனின் பாட்டி வெளியே சென்றுள்ளார்.

இதற்கிடையே, கண்விழித்த சிறுவன் தனது பாட்டியை தேடியுள்ளான். பாட்டியை காணாததால் பால்கனி பகுதிக்கு வந்த அந்தச் சிறுவன் அங்கிருந்து தவறி விழுந்துள்ளார் எனத் தெரிகிறது. ஆனால், அதிர்ஷ்டவசமாக அந்த 20 மாடி கட்டடத்தின் 19 ஆவது மாடியில் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த கம்பியை இறுக்கமாக பிடித்தபடி கீழே விழாமல் சிறுவன் உயிர் தப்பியுள்ளான்.



அந்தப்பகுதி வழியாக சென்ற வழிப்போக்கர் ஒருவர், உயிருக்கு ஆபத்தான நிலையில் சிறுவன் அந்தரத்தில் தொங்கியபடி அலறிக்கொண்டிருப்பதை பார்த்து உடனடியாக பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

உடனடியாக அந்தப் பகுதிக்கு விரைந்த மீட்பு குழுவினர் சிறுவனை பத்திரமாக மீட்டுள்ளனர். சிறுவன் 20 நிமிடமாக அந்தரத்தில் தொங்கியபடி உதவிக்கு அலறும் வீடியோ இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

# தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சியை கலைக்க பாரதீய ஜனதா திட்டம்

## திருமாவளவன் தெரிவிப்பு



முதல்வர் எடப்பாடி பழனி சாமியை அச்சுறுத்தி அவரை மாற்ற அல்லது தமிழக அரசை கலைக்க மத்திய அரசு திட்ட மிட்டிருக்கிறது என்று திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

சென்னை – சேலம் 8 வழி பசுமை சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து விடுதலை சிறுத்தைகள் சார்பில் திருவண்ணாமலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருமாவளவன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், 8 வழி பசுமை சாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷங்களை எழுப்பினர்.

அதை தொடர்ந்து திருமாவளவன் நிருபர்களிடம் தெரிவிக்கையில் –

8 வழி பசுமை சாலைக்காக பல்வேறு எதிர்ப்புகள், போராட்டங்களை விவசாயிகள், சமூக ஆர்வலர்கள், அரசியல் கட்சியினர் நடத்தினாலும் அதனை கண்டு கொள்ளாமல், மக்களின் கோரிக்கைகளை கேட்காமல் மத்திய, மாநில அரசுகள் பிடிவாதமாக இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்த தீவிரம் காட்டி வருகின்றன. தமிழகத்தை தொழில் வளமுள்ள மாநிலமாக வலுப்படுத்த மத்திய அரசு முனைப்பு காட்டுகிறதா? அல்லது மாநில அரசு முனைப்பு காட்டுகிறதா? என்று தெரியவில்லை.

8 வழி சாலையின் அவசியம் குறித்து மத்திய, மாநில அரசுகள் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். 8 வழி சாலைக்காக வளங்கள் அழிக்கப்படுகின்றமை அதிர்ச்சி அளிக்கிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடுபவர்களை காவல் துறையினரை கொண்டு கைது செய்வது, சமூக விரோதிகள் என கூறுவது, குண்டர் சட்டத்தில் அடைப்பது என்பது கண்டனத்துக்குரியது. இந்த திட்டம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்ட பின் இதனை நடைமுறைப்படுத்த அரசு முன்வர வேண்டும். இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து 20ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) சேலத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

மத்திய அரசு காவிரி பகுதியில் ஹைட்ரோ கார்பன் திட்டத்தையும், தேனி பகுதிகளில் நியூட்ரினோ திட்டத்தையும், தற்போது 5 மாவட்டங்களில் 8 வழி சாலை திட்டத்தையும் அமுல்படுத்த ஆர்வம் காட்டி வருகிறது. தமிழகத்தின் இயற்கை வளங்கள் அழிக்கப்படும் நிலையில் மத்திய அரசு மாநில அரசின் மீது திட்டங்களை திணிக்கிறது. இதை எதிர்த்து பேச வலுவில்லாத நிலையில் தமிழக அரசு இருப்பது வேதனை அளிக்கிறது.

முதலமைச்சர் எடப்பாடி பழனி சாமிக்கும், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கும் இடையே இடைவெளி ஏற்படுத்தும் நோக்கில் பா.ஜ.க. செயல்படுகிறது என்று அரசியல் வல்லுநர்கள் கருத்து கூறுகின்றனர். தமிழக அரசை பலவீனப்படுத்தும் வகையில் குறிப்பாக எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் பா.ஜ.க. அரசு தொடர்ந்து செயல்பட்டு வருவது வேதனை அளிக்கிறது.

வருமான வரித்துறை சோதனை நடத்துவதில் அரசியல் உள்நோக்கம் உள்ளது. குறிப்பாக தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்கும் தற்போது இணக்கம் இல்லை என்பது வருமான வரித்துறையினர் நடத்துகின்ற சோதனையில் இருந்து தெரிகிறது. தமிழக அரசுக்கு நெருக்கடி தரும் வகையிலும், தமிழக அரசியலில் ஒரு பதற்றத்தை உருவாக்கும் வகையிலும் மத்திய அரசு செயல்படுவது கண்டனத்துக்குரியது.

இது மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் உள்ள கசப்பை வெளிப்படுத்துவதாகும். எடப்பாடி பழனிசாமியை அச்சுறுத்தி அவரை மாற்ற அல்லது தமிழக அரசை கலைக்க மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது. அமித்ஷாவின் கருத்தின் அடிப்படையில் அரசின் மீது ஊழல் குற்றச்சாட்டை சுமத்தி கலைக்க முயற்சிக்கலாம். மத்திய அரசு ஏதோ உள்நோக்கத்தோடு செயல்பட்டு கொண்டிருக்கிறது.

8 வழி சாலை குறித்து ரஜனி ஆதரித்து பேசுவது என்பது அதிர்ச்சியான செய்தியல்ல. தி.மு.க.வுடனான கூட்டணி கட்சிகளுடன் இணைந்து விடுதலை சிறுத்தைகள் கட்சி இயங்கும். இதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியாவிலேயே பயங்கரவாத இயக்கங்கள் ஏதுமில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# மோடியின் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## காங்கிரஸ் தலைமையில் அணிதிரளும் 12 கட்சிகள்

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்று தொடங்கி உள்ள நிலையில், மோடி அரசுக்கு எதிராக காங்கிரஸ் உள்ளிட்ட 12 எதிர்க்கட்சிகள் இணைந்து நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர உள்ளன.

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. 18 நாள்கள் கூட்டம் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் 'முத்த லாக்' உள்ளிட்ட முக்கிய பிரேரணைகளை நிறைவேற்ற அரசு ஆர்வம் கொண்டுள்ளது. மேலும் புதிதாக 18 பிரேரணைகள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து, நிறைவேற்றப்படும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

ஆனால், ஆளும்பா.ஜனதா கூட்டணி அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஓரணியில் வரிந்து கட்ட ஆயத்தமாகி வருகின்றமையால் கூட்டம் அமைதியாக நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

மத்திய அரசுக்கு எதிராக இந்த கூட்டத்தொடரில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபுநாயுடு முடிவு செய்துள்ளார். இதற்காக அவர் எதிர்க்கட்சி எம்.பி.க்களைச் சந்தித்து ஆதரவு கேட்டு வந்தார்.

இந்நிலையில் டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காங்கிரஸ் உள்ளிட்ட 12 கட்சிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில், பிரதமர் மோடி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார். மேலும் சில கட்சிகளை சந்தித்து இந்த விவகாரத்தில் ஒருமித்த கருத்து ஏற்படுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன் எனவும் அவர் கூறினார்.

அநேகமாக நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான முன்னறிவித்தலை இன்று சபாநாயகரிடம் அளிக்கலாம் என தெரிகிறது. எனவே, இந்த கூட்டத்தொடரில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது .

குஜராத்தில் விபத்து:

# ஒரே குடும்பத்தை சேர்ந்த 8 பேர் பலி!



குஜராத் மாநிலத்தில் எதிரே வந்த லொறியின் மீது கார் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

குஜராத் மாநிலம், மோர்பி மாவட்டத்தில் அமைந்துள்ள ராஜ்கோட்-மோர்பி தேசிய நெடுஞ்சாலையில் தங்காரா எனும் பகுதியில் எதிரே வந்த லொறியின் மீது சொகுசு கார் மோதி விபத்தில் சிக்கியது. இதனால் பற்றிய தீ வேகமாக கார் முழுதும் பரவியது.

இதில், காரில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த 8 பேர் பரிதாபமாக சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். மேலும், ஒருவர் படுகாயங்களுடன் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

தகவல் அறிந்ததும் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனை செய்ய மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நொய்டாவில் கட்டடம் இடிந்து விபத்து:

# 50 இற்கும் மேற்பட்டோர் இடிபாடுகளில் சிக்கினர்!



உத்தர பிரதேச மாநிலம் நொய்டாவில் இரண்டு கட்டடங்கள் இடிந்து விபத்துக்குள்ளானதில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

உத்தரப்பிரதேசம் மாநிலம், நொய்டாவில் உள்ள ஷாஷபரி கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் 6 மாடி கட்டடம் திடீரென இடிந்து விழுந்ததில் அதன் அருகில் இருந்த 4 மாடி கட்டடமும் சேர்ந்து இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில், 4 மாடி கட்டடத்தில் வசித்து வந்த 18 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 50இற்கும் மேற்பட்டோர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. எனினும், உயிரிழந்தவர்கள் மற்றும் படுகாயம் அடைந்தவர்களை பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை.

விபத்து குறித்த தகவல் அறிந்ததும் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் சின்னத்திரை நடிகை பிரியங்கா தற்கொலை!



சென்னை வளசரவாக்கத்தில் வசித்து வந்த பிரபல சின்னத்திரை நடிகை பிரியங்கா தனது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது.

சென்னை வளசரவாக்கம் காமகோடி நகரில் வசித்தவர் பிரியங்கா (வயது 32). புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த இவர் சென்னையில் தங்கி ரி.வி சீரியல்களில் நடித்து வந்தார். வம்சம் என்ற சீரியல் இவர் நடித்து வந்த பிரபலமான சீரியலாகும். பிரபல தனியார் தொலைக் காட்சியிலும் சிலகாலம் முன்பு நடித்து வந்தார். இவரது கணவர் அருண்பாலா ( வயது 38). இவர் கூடைப்பந்து பயிற்சியாளர். இருவருக்கும் திருமணமாகி 6 ஆண்டுகள் ஆகின்றன.

குழந்தை இல்லை என்ற பிரச்சினை பெரிதாக வெடித்த சில வருடங்களாக இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. பிரச்சினை பெரிதாக வெடித்த நிலையில் கணவன் மனைவி இடையே பிளவு ஏற்பட்டுள்ளது. பிளவு அதிகரித்து கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு கணவர் அருண்பாலா பிரிந்து சென்றுவிட்டார்.

இதற்கிடையே விவாகரத்துக் கோரி இருவரும் மனு செய்துள்ளனர். இந்நிலையில் தனியாக வசித்து வந்த பிரியங்கா, நேற்று முன்தினம் இரவு திடீரென தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஜோர்ஜியாநாட்டுக்கு விஜயம் செய்திருக்கும் அவர், அங்கு திபிசிலி மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமான - திறந்த அரசாங்கப் பங்குடைமைத் தலைவர்களின்-சந்திப்பிலேயே கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

தான் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்படும்போது உலகில் எந்தவொரு நாட்டிலும் இல்லாத வகையில் எல்லையற்ற அதிகாரம் இலங்கையில் நிறைவேற்றுஅதிகாரம்கொண்ட ஜனாதிபதியிடம் இருந்தது என்றும், தான் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு 06 மாதங்கள் நிறைவடைவதற்கு முன்னர் 19ஆவது அரசமைப்பு திருத்தத்தின்மூலம்அந்தஎல்லையற்ற அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கு வழங்கி நாடாளுமன்றத்தைப்பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அன்று பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதியரசர்கள், பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் மற்றும் ஆணைக்குழு அதிகாரிகள் ஜனாதிபதியின் விருப்பின் பேரிலேயே நியமிக்கப்பட்டு வந்தனர்.

இன்று அந்த அனைத்து நடவடிக்கைகளும் நாடாளுமன்றத்தினால் நியமிக்கப்பட்டுள்ள அரசமைப்புச் சபையினூடாக மேற்கொள்ளப்படுகின்றன என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தான் நாட்டை பொறுப்பேற்கின்றபோது அரசியல் அதிகாரத்தின் காரணமாக நீதித்துறையும் பாரிய ஊழலுக்கு உள்ளாகியிருந்ததாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி நீதித்துறையின் சுயாதீனத் தன்மையைப் பாதுகாப்பதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதென்று தெரிவித்தார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்து ஆணைக்குழுக்களும் இன்று பலமான நிலையில் உள்ளன. எவரும் தலையிட முடியாத வகையில் சுயாதீனமான, பக்கச்சார்பற்ற நிறுவனங்களாக அவை செயற்படுகின்றன என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அரசியல்வாதிகளாக இருந்தாலும்அரசாங்கஅதிகாரிகளாக இருந்தாலும் தன்னிடமுள்ள தனிப்பட்ட அதிகாரத்தை முடியுமானளவு குறைத்து அதிகாரத்தை யாப்பு ரீதியாக கூட்டாண்மையிடம் பொறுப்பளிக்க வேண்டும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, கருத்தரங்குகள், செயலமர்வுகள் ஊடாக அது தொடர்பாக அரசாங்க அதிகாரிகளுக்கு அறிவூட்டவும் ஊழல் மோசடியை ஒழித்துக் கட்டுவது தொடர்பாக சிவில் சமூகத்திடம் உள்ள அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவித்தார். (உ)

## அச்சுவேலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் கதவு, கண்ணாடிகள் உட்பட வீட்டில் இருந்த பெறுமதியான பொருள்களை அடித்து உடைத்து சேதப்படுத்தித் தமக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுத்ததாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் வீட்டுக்காரரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பலே இந்தத் தாக்குதலை முன்னெடுத்தது. அவர்கள் முகத்தை மூடி துணிகட்டியிருந்தனர். அக்கும்பல் வீட்டுக் கதவை அடித்து சேதப்படுத்தியது. வீட்டுக்குள் நுழைந்து ஜன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்தது. குளிசாதனப் பெட்டி உள்பட்ட பெறுமதியான பொருள்களை அடித்துச் சேதப்படுத்தியது.

வீட்டிலிருந்தவர்கள் அச்சுறுத்தல் காரணமாக மறைந்து கொண்டனர் என்று பொலிஸில் வழங்கப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மகன் ஒருவர் வெளிநாட்டில் உள்ளார். மற்றொரு மகன் இங்கு உள்ளார். அவரை அச்சுறுத்தும் வகையிலே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதுஎன்றுபொலிஸார் தெரிவித்தனர்.

## '1990'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேரடிக்காணொலித்தொழிநுட்ப முறையில் உரையாற்றுகிறார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வழங்கிவைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு 7 அம்புலன்ஸ்களும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 4 அம்புலன்ஸ்களும், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு தலா 3 அம்புலன்ஸ்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தஅம்புலன்ஸ்கள்பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுப் புறப்பட்டன.

அவற்றில்பணியாற்றும்சாரதிகள் இந்தியாவில் பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியமையை அடுத்து, உறுப்பினர்களின் அவதானிப்புக்கு ஏற்ப அந்த மூல ஆவணத்தை மாற்றித் திருத்தியமைத்த பின்னர் - சுமார் இரண்டு வாரம் கழித்து - மீண்டும் கூடி அது பற்றி முடிவெடுப்பது என நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என அறியவந்தது.

நேற்று சமர்ப்பிக்கப்பட்ட மூல ஆவணம் அரசமைப்பு நகலுக்கான வடிவத்தை ஒத்திருந்தது. எனினும், ஒவ்வொரு அத்தியாயத்திலும் பல்வேறு கட்சிகளினதும் பிரதிநிதிகள் தெரிவித்த மாற்று யோசனைகள் சேர்க்கப்படவில்லை என நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் குறைகூறினர்.

அதனைக் கருத்தில் எடுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தற்போதையமூலஆவணத்தில் ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் கட்சிகளின் மாற்று யோசனைகளையும் பின்னிணைப்பாகச் சேர்த்து புதிய ஆவணத்தை உடன் தயாரிக்குமாறு உத்தரவிட்டார்.

அந்தஆவணத்துடன்அடுத்த இரண்டு வாரங்களில் மீண்டும் வழிகாட்டல் குழுவைக் கூட்டி அதனை ஆராய்வது என்றும் அங்கு அவர் அறிவித்தார். (உ)

## ஜனாதிபதி வேட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெல்விட்ட பகிரங்க அறிக்கை மூலம் நேற்றுத் தெளிவுபடுத்தினார்.

'2020 ஜனாதிபதித் தேர்தலுக்குரிய'பொதுஜனபெரமுனவின் வேட்பாளராகக் கோட்டாபய ராஜபக்ஷவை உத்தியோகபூர்வமாகத் தீர்மானித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்து விட்டார் என நேற்றுமுன்தினம் (17ஆம்திகதி) சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் செய்திகள் வெளியாகின.

பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் யார் என்பதை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்னும்தீர்மானிக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷசிங்கப்பூருக்கான பயணத்தை ஆரம்பித்த பின்னர் - அவர் நாட்டில் இல்லாத சமயத்தில் - இந்தச் செய்தி திட்டமிட்டு புகுத்தப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவினதும்கூட்டுஎதிரணியினதும்வேட்பாளர் யார் என்பதை ஊடக அறிக்கை மூலமாக அல்லாது பொதுமக்கள் கூட்டம் ஒன்றின் மூலம் தானே நேரடியாக அறிவிப்பார் என்பதை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்களுக்குக் கூறிவைக்க விரும்புகிறார்.

மேற்படி புரளி அறிக்கையில் கூறப்பட்டபடி 'ஜனாதிபதித் தேர்தல்2020'என்பதும்தவறு. எமது அரசமைப்பின்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2019 டிசெம்பர் 9ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும். இதைக் கூட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே ஊடகஅறிவிப்புஒன்றின்மூலம் முதல் தடவையாக அம்பலப்படுத்தியிருந்தார் என்பது அவதானிக்கத் தக்கது.

- இப்படி அவரின் ஊடகச் செயலாளர் நேற்றுத் தாம் விடுத்த தெளிவுபடுத்தல் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியிருக்கின்றார். (உ)

## ஆவாக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவாகுழுவின் செயற்பாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குச் சட்டம் ஒழுங்கு அமைச்சும் பொலிஸாரும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமைகூட்டுஎதிரணியின் நாடாளுமன்றக் குழு தலைவர் தினேஷ் குணவர்தன எம்.பி எழுப்பிய கேள்வியை அடுத்து எழுந்த சர்ச்சைத் தொடர்ந்து அதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

இராணுவத்தினரின் எண்ணிக்கை தொடர்பிலும் முகாம்கள் தொடர்பிலும் இராணுவமே அதற்கான தீர்மானங்களை எடுக்கின்றன. இந்த விவகாரங்களில் நானோ அல்லது ஜனாதிபதியோதலையீடுசெய்வதில்லை.

இராணுவப் பதவி நிலைகளான ஜெனரல், கேர்ணல், மேஜர் போன்ற பதவித் தரங்களை நாம் குறைக்கவில்லை.

யுத்தத்திற்குப் பின்னர் முகாம்கள் குறைப்பது சாதாரண விடயமாகும். இரண்டாம் உலகயுத்தம் நடைபெற்ற பின்னர் இதுதான் நடந்தது. இராணுவத்திற்கான ஒதுக்கீடு செய்யும் நிதியில் மூலதனச்செலவாக இராணுவத் தலைமையகத்திற்கான புதிய கட்டடத்திற்கே அதிகளவு செலவிடப்படுகின்றது. பழைய இராணுவத் தலைமையகத்திற்கான காணிகளைஏன்விற்கப்பட்டன? அதன்காரணமாகவேவீணாகப் புதிய கட்டடத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

வடக்கில் உருவாகியுள்ளஆவா குழு பயங்கரவாத அமைப்பு அல்ல. ஆயுதக் குழுவாகவும் அதனைக் கருத முடியாது. அது இராணுவத்துடன்சம்பந்தப்பட்டதல்ல. சட்டம் ஒழுங்கு சீர்குலைவாகவே அதனை கருத வேண்டியுள்ளது. ஆகவே இது தொடர்பாக சட்டம், ஒழுங்கு அமைச்சர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். அண்மையில் அமைச்சரும் பிரதி அமைச்சரும்வடக்கிற்குவிஜயம் செய்து நிலைமைகளை கண்டறிந்து வந்தனர். இதனால் அச்சம் கொள்ள தேவையில்லை. - என்றார் பிரதமர்.

## டெனிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்களுள் ஒருவர் இந்த மனுவை விசாரிக்க முடியாத நிலைமை இருந்தமையாலும்அது26ஆம் திகதி, பிறிதொரு உயர்நீதிமன்ற ஆயத்துக்கு மாற்றப்பட்டது.

நேற்று இந்த மனு முதல் தடவையாகநீதியரசர்கள்திஸ்ஸ டி ஆப்ரூ, பிரசன்ன ஜயவர்த்தன, எல்.ரி.டி. தெஹிதெனிய ஆகியோரைக்கொண்டஆயத்தின் முன்னால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

டெனிஸ்வரனின்மூலவழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முதல் தடவையான எடுக்கப்பட்டபோது, அந்தநீதிமன்றம் அதை நிராகரித்தது. அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்து, உயர் நீதிமன்ற உத்தரவுப் பிரகாரம் மீண்டும் வேறு ஒரு மேன்முறையீட்டுநீதிமன்ற ஆயத்தில் தனது வழக்கை விசாரணை செய்யும் வாய்ப்பை டெனிஸ்வரன் பெற்றிருந்தார்.

அவரதுமூல - முதல்வழக்கை - மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்தள்ளுபடிசெய்தஇரண்டு நீதியரசர் குழாமில் நீதியரசர் தெஹிதெனியவும் ஒருவர். அவர் தற்போது உயர்நீதிமன்ற நீதியரசராகப்பதவிஉயர்வுபெற்றுப் பணியாற்றுகின்றார்.

ஏற்கனவே இந்த வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்த நீதியரசர் அவர் என்பதால், உயர்நீதிமன்றத்தில் அந்த வழக்கின் மேன்முறையீட்டைஅவர் அடங்கியஆயம்விசாரணைசெய்வது பொருத்தமற்றது என்று நேற்று மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், முதல்வர் விக்னேஸ்வரனின்மேன்முறையீடுதொடர்பான ஆவணங்கள் சட்டமா அதிபர் தரப்புக்கு உரிய முறையில் இன்னும் கிடைக்கவில்லை என்றும் தெரியப்படுத்தப்பட்டது.

இவற்றைப் பரிசீலித்த நீதியரசர்கள் வழக்கை பிறிதொரு ஆயத்துக்கு முன்னால் 26ஆம் திகதி எடுப்பதற்கு உத்தரவிட்டனர்.

மேன்முறையீட்டு மனுதாரரான முதலமைச்சர் சார்பில் சட்டத்தரணி லக்ஷ்மணன் ஜெயக்குமார் ஆஜரானார்.

டெனிஸ்வரன் சார்பில் சட்டத்தரணிசுரேன்பெர்னாண்டோ, ஆறாவது எதிர்மனுதாரரான டாக்டர் சத்தியலிங்கம் சார்பில் சட்டத்தரணி நிரான் அங்கிட்டல், சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் தயாரத்ன ஆகியோர் ஆஜரானார்கள். (உ)

## 2 எதிரிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதி கிஹான் குலதுங்க இத்தீர்ப்பை வழங்கினார்.

விசாரணைக் காலத்தில் தப்பிச்சென்றஎதிரிகளில்ஒருவரைத் தேடிக் கைது செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (உ)

## அஸ்மீன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சசிதரன் தெரிவித்தார்.

யாழ்.பிரதானவீதியில்அமைந்துள்ள அவருடைய அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் ஊடகவியலாளர்களைச் சந்தித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாணத்தில் உள்ள பெண்கள்மற்றும்சிறுவர்களின் பாதுகாப்பு இப்போது கேள்விக்குறியாக உள்ளது. வடக்கில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் தனது பாதுகாப்பிற்காக துப்பாக்கியை வழங்குமாறும், அதனைப்பயன்படுத்துவதற்கு அனுமதியைத் தருமாறும் கோரும் அளவிற்குத்தான் இங்கு பெண்களின் பாதுகாப்பு நிலை உள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் போன்றவர்கள் இங்கிருக்கின்ற நிலையில் துப்பாக்கி பெண்களிடம் இருக்கவேண்டும் என்ற நிலையும் தற்போது தோன்றியுள்ளது.

நான்ஆயுதத்தைஅறியதவள் அல்ல. துப்பாக்கிஎன்னிடம்உள்ளது என்றால் அதை நிரூபிக்க வேண்டும். என்னிடம் எந்த ஆயுதமும் இல்லை. என்னுடைய கைகளும், வார்த்தைகளும் தான் என்னுடைய ஆயுதங்களாக உள்ளன.

விசேடமாக அனுமதி பெற்று ஆயுதம்இருக்குமாகஇருந்தால் அதனை வெளிப்படையாக சொல்வதில் பயமில்லை.

நான், முதலமைச்சர், சிவாஜிலிங்கம், சித்தார்த்தன், கஜதீபன் போன்றவர்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு 2 போனஸ் ஆசனங்கள் கிடைத்தன.

அந்த போனஸ் ஆசனத்தில் மாகாண சபை உறுப்பினராக வந்த அஸ்மின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விசுவாசத் திற்காகஎங்களுக்குஎதிராகஆதாரம்இல்லாதஅவதூறுகளையும், வதந்திகளையும் கட்டவிழ்த்துக் கொண்டிருக்கின்றார். இது கண்டிக்கத்தக்க விடயம்.

என்னிடத்தில் துப்பாக்கி உள்ளது என்று சொல்லியுள்ள அஸ்மின்என்னிடத்தில்இருந்து துப்பாக்கியை எடுத்துக் காண்பிக்க வேண்டும். அதுதவிர, பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்கடிதம்வந்திருந்தால்நான் துப்பாக்கி பெற்றுக் கொண்டதற்கான ஆவணமும் இருக்க வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் இருந்தால் அவர் அதனை வெளிப்படுத்தலாம்.

என்னுடைய சிறப்புரிமையை அஸ்மின் மீறியமை மட்டுமல்லாமல், என்னை ஆயுததாரியாக சித்திரித்திருக்கின்றமை தொடர்பில் அவருக்கு எதிரான வழக்கு ஒன்றைப் பதிவு செய்ய உள்ளேன்.

நாளை என்னுடைய சட்டத்தரணிகள் கொழும்பில் இருந்து வருகைதரவுள்ளனர். அவர்களுடன் சட்ட ஆலோசனை பெற்ற பின்னர் அஸ்மினுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடருவேன். - என்றார். (உ)



# மூன்றாவது ஆட்டத்தில் இந்தியாவை வீழ்த்தி ஒரு நாள் தொடரை வென்றது இங்கிலாந்து

இங்கிலாந்து – இந்தியா இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி இங்கிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

இந்தப் போட்டி லீட்ஸ் ஹெட்டிங்லே மைதானத்தில் நடைபெற்றது. 'டாஸ்' வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் பந்து வீச்சு தேர்வு செய்தார்.

இந்திய அணியில் லோகேஷ் ராகுல் நீக்கப்பட்டு தினேஷ் கார்த்திக் இடம்பிடித்திருந்தார். அதேபோல் உமேஷ் யாதவ் நீக்கப்பட்டு சர்துல் தாகூர் சேர்க்கப்பட்டிருந்தார். சித்தார்த் கவுல் நீக்கப்பட்டு புவனேஸ்வர்குமார் சேர்க்கப்பட்டார்.

இந்திய அணியின் ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ரோகித் சர்மா – தவான் ஜோடி ஓட்டங்கள் குவிக்க திணறியது. இதனால், முதல் ஐந்து ஓவர் முடிவில் 12 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது இந்தியா. 18 பந்தில் 2 ஓட்டங்கள் மட்டுமே அடித்திருந்த நிலையில் வில்லே பந்துவீச்சில் ரோகித் சர்மா ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் விராட் கோஹ்லி மற்றும் ஷிகர் தவான் இருவரும் நிதானமாக விளையாடி சீரான வேகத்தில் ஓட்டங்களைக் குவித்தனர்.

17.4 வது ஓவரில் இந்தியா இரண்டாவது விக்கெட்டை இழந்தது. ஷிகர் தவான் 44 ஓட்டங்க



ளில் அவுட் ஆனார். இதன் பின்னர் விராட் கோஹ்லியுடன் தினேஷ் கார்த் திக் களமிறங்கினார். தினேஷ் கார்த்திக் 21 ஓட்டங்களில் அவுட் ஆனார். டோனியுடன் விளையாடிய விராட் கோஹ்லி 71 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ரெய்னா ஓர் ஓட்டத்தில் ஆட்டமிழக்க ஹார்திக் பாண்டியா 21 ஓட்டங்களும், டோனி 66 பந்தில் 42 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். புவனேஸ்வர் குமார் (21), சர்துல் தாகூர் (13 பந்தில் 22 ஓட்டங்கள்) ஓரளவுக்கு விளையாட இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 256 ஓட்டங்கள் சேர்த்தது. இதனால், இங்கிலாந்து அணிக்கு 257 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இங்கிலாந்து அணி சார்பில் ரஷித் 49 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

அடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான வின்ஸ் மற்றும் பெய்ர்ஸ்டோ இருவரும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 4.4 ஓவரின் 43 ஓட்டங்கள் அடித்திருந்த நிலையில் தாக்கூர் பந்துவீச்சில் ரெய்னாவிடம் கேட்ச் கொடுத்து பெய்ர்ஸ்டோ ஆட்டமிழந்தார். அவர் 13 பந்துகளில் 7 பவுண்டரிகள் உட்பட 30 ஓட்டங்கள் விளாசினார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான வின்ஸ் 27 ஓட்டங்களில் ரன் அவுட் ஆன நிலையில் ஜோ ரூட் மற்றும் இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் ஜோடி சேர்ந்தனர்.

இந்திய பந்துவீச்சை சிதறடித்த இந்த ஜோடியைப் பிரிக்க முடியாமல் இந்திய பந்து வீச்சாளர்கள் திணறினர். ரூட் 60 பந்துகளிலும், மோர்கன் 58 பந்துகளிலும் அரைசதம் அடித்து இங்கி லாந்து அணியின் வெற்றி வாய்ப்பைப் பிரகாசப்படுத்தினர். 3ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த இவர்கள் இருவரும் இணைந்து 186 ஓட்டங்களைச் சேர்த்து அசத்தினர்.



இறுதியில், பாண்டியா வீசிய 44ஆவது ஓவரின் 3ஆவது பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஜோ ரூட், 120 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்கள் எடுத்து ஒருநாள் போட்டிகளில் தனது 13ஆவது சதத்தை பதிவு செய்தார். மோர்கன் 108 பந்துகளில் 88 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார். இதனால் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி இங்கிலாந்து அணி தொடரைக் கைப்பற்றியது.

இந்திய அணி தரப்பில் சர்துல் தாக்கூர் மட்டுமே 10 ஓவருக்கு 55 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 1 விக்கெட் எடுத்திருந்தார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட புவனேஸ்குமார், சாஹல் மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் விக்கெட் ஏதும் கைப்பற்றாமல் ஏமாற்றமளித்தனர்.

அடுத்த வருடம் இங்கிலாந்தில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெற உள்ள நிலையில், இந்த தொடருடன் இங்கிலாந்து அணி தொடர்ச்சியாக 8 தொடர்களை கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அணித் தலைவராக 3000 ஓட்டங்களை விரைவாக கடந்த விராட் கோஹ்லி

அணித் தலைவனாக ஒருநாள் போட்டியில் அதிகவேகமாக 3000 ஓட்டங்களை எட்டிய வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் விராட் கோஹ்லி.

இங்கிலாந்து – இந்தியா இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி லீட்ஸ் ஹெட்டிங்லேயில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 256 ஓட்டங்கள் சேர்த்தது.

3ஆவது வீரராக களம் இறங்கிய அணித் தலைவர் விராட் கோஹ்லி 72 பந்தில் 8 பவுண்டரியுடன் 71 ஓட்டங்கள் சேர்த்தார். அணித் தலைவனாக விராட் கோஹ்லியின் 52ஆவது போட்டி இதுவாகும். இதில் 49 இன்னிங்ஸில் துடுப்பாட்டம் செய்துள்ளார்.

விராட் கோஹ்லி 14 ஓட்டங்கள் அடித்திருக்கும்போது அணித் தலைவன் பதவியில் இருந்து விரைவாக 3000 ஓட்டங்களை எட்டிய வீரர் என்ற பெருமையை பெற்றுள் ளார். இதற்கு முன் ஏ.பி.டி



வில்லியர்ஸ் 60 இன்னிங்ஸில் இந்த சாதனையை செய்திருந்தார். தற்போது விராட் கோஹ்லி 11 இன்னிங்ஸில் மீதமுள்ள நிலையில் அசத்தியுள்ளார்.

எம்எஸ் டோனி 70 இன்னிங்ஸிலும், கங்குலி 74 இன்னிங்ஸிலும், கிரேம் ஸ்மித் மற்றும் மிஸ்பா உல் ஹக் ஆகியோர் 83 இன்னிங்ஸிலும், ஜெயசூர்யா மற்றும் ரிக்கி பொண்டிங் 84 இன்னிங்ஸிலும் 3000 ஓட்டங்களை கடந்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir



# முதல்வர் – ஆளுநர் புரிந்துணர்வுடன் தீர்வு காண்பதற்கு முன்வரவேண்டும்


## அவைத் தலைவர் அழைப்பு





-எஸ்.நிதர்ஷன் -

டெனிஸ்வரனின் அமைச்சர் பதவி விவகாரத்தால் வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டிருக்கும் இக்கட்டுநிலையைக்கருத்திற்கொண்டு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் ஆளுநர் ரெஜினோல்ட் குரேயும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு விரைவாக இந்த பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டுமென அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.



இப்பிரச்சினை தொடர்பில் மாகாண சபையின் அவைத் தலைவரும் தமிழரசுக் கட்சியின் துணைப்பொதுச்செயலாளருமான சி.வீ.கே. சிவஞானம் மாகாண பேரவைச் செயலகத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துக்களைநேற்றுவெளியிட்டார்.

அங்கு அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும் வருமாறு-

### முதல்வரை மாட்டும் எண்ணம் ஏதும் எனக்கு இல்லை

கேள்வி: டெனிஸ்வரன் விடயத்தில் நீதிமன்றத் தீர்ப்புக்குக் காரணம் அவரைத்தான்நீக்கியமை குறித்து ஆளுநர் அரச வர்த்தமானியில் பிரசுரிக்காமைதான் எனக் குறிப்பிட்டிருக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரன், சட்டத்திற்குப் புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பண்ணிதன்னை மாட்டி விடுவதற்கு சபை உறுப்பினர்கள்முயல்கின்றனரா எனக் கேள்வியும் எழுப்பியிருக்கின்றாரே?

பதில் : முதலமைச்சரை சட்டத்திற்கு முரணான வகையில் மாட்டுகின்ற தான நிலைமை இருக்குமோ, இல்லையோ என்று உண்மையாக எனக்குத் தெரியாது. அந்த எண்ணம் நிச்சயமாக எனக்கும் இல்லை. ஆகையினால், அது முதலமைச்சரின் தனிப்பட்ட கருத்தாகவே பார்க்கிறேன். உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டியது முதலமைச்சருடைய பொறுப்பும் உரிமையும் ஆகும்.

### எனக்கு தெரியாது

கேள்வி: வடக்கு மாகாண அமைச்சர் நியமனத்தில் எழுந்திருக்கும் சர்ச்சைகளைத்தொடர்ந்து தன்னுடைய அனுமதியின்றி அமைச்சரவைக் கூட்டங்களைக் கூட்ட வேண்டாமென மாகாண ஆளுநர் குரே மாகாண பிரதம செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளமை குறித்து...?

பதில்: இவ்வாறான உத்தரவு குறித்து எத்தகையஉத்தியோகபூர்வத் தகவலும் எனக்கு இது வரையில் கிடைக்கப் பெறவில்லை. ஆனாலும் அமைச்சர் விடயத்தில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளையடுத்துத் தன்னுடையநிலையைப்பிரதம செயலாளர் ஆளுநருக்குத் தெளிவுபடுத்தக் கேட்டிருக்கக் கூடும். அதைப் பற்றி கடந்த அமர்விலும் நான் பிரஸ்தாபித்திருக்கிறேன். ஏனென்றால் நீதிமன்றத்தில் இந்த விடயம் இருக்கின்றது. அத்துடன் தற்போது ஆறு அமைச்சர்கள்உள்ளனர்எனவும்கருதப்படுகின்றது. ஆகையால் அது அரசமைப்புக்கு முரணானது என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த வகையில் ஒரு வேளைபிரதமசெயலாளர் ஆளுநரின் தெளிவுபடுத்தலைக் கேட்டிருக்கலாம். அதற்கு ஆளுநர் அப்படியானதொரு கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறாரோ எனக்குத் தெரியவில்லை. ஆனபடியால் அந்த நிலையை சரியான வழியில் அணுகக் கூடிய பொறுப்பு ஆளுநருக்கும் அமைச்சர் சபைக்கும் உண்டு. ஆகையினால் முறைப்படியான,முழுமையான அமைச்சர் சபை அதற்கான ஒரு முடிவை எடுக்குமென்று நான் எதிர்பார்க்கின்றேன்.

### சபையின் தீர்மானம்

கேள்வி : அமைச்சரவையில் ஏற்பட்டிருக்கும் இக்கட்டானநிலையில்அரசமைப்பில் இருக்கின்ற தத்தவத்தை முறையாகப் பயன்படுத்தி வடக்கு மாகாண சபைக்கு ஒரு முறையான அமைச்சர் சபையை உருவாக்குவதற்கான ஆலோசனையை எந்தவித தாமதமுமின்றி ஆளுநருக்கு முதலமைச்சர் வழங்க வேண்டுமென மாகாண சபையில்தீர்மானம்நிறைவேற்றப்பட்டு முதல்வருக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றது. ஆனால் அமைச்சர் ஒருவரை நியமிக்கும் அல்லதுபதவி இறக்கும் உரித்து தமக்கு இல்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறியிருக்கும்போதுதான் எவ்வாறு ஆலாசனை வழங்குவது என முதலமைச்சர் கேள்வியெழுப்பியிருக்கின்றாரே?

பதில் : சபைத் தீர்மானத்தை நான் முதலமைச்சருக்கும் அனுப்பி அதனை ஆளுநருக்கும் பிரதியிட்டிருந்தேன். அதற்கு முதலமைச்சர் எனக்குஒருபதில்அனுப்பியிருக்கின்றார். அந்தப்பதிலுக்கான ஒரு பதிலை நானும் மீளவும் முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறேன். இப்படி இருக்கையில் என்னுடைய பார்வையில் நியமனம் என்று வருகின்ற போது அது ஆளுநருடையது. அதற்கமைய நியமனங்களைவழங்குகின்றபோது அதற்கான ஆலோசனைகளைதருகின்றஅதிகாரம் அல்லது பொறுப்பு முதலமைச்சருடையது. ஆகவே, நியமனங்களை ஆளுநர் செய்வது முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் தான்.

எனவே, அந்த நியமன அதிகாரம் என்பது ஆளுநரிடமும் ஆலோசனை வழங்குவதென்ற அதிகாரம்முதலமைச்சரிடமும் இருக்கின்ற காரணத்தினால் ஆளுநர் தனித்து நியமனங்களை செய்ய முடியாதென்பது தெட்டத்தெளிவு. அதற்கான சிபாரிசுகளை, ஆலோசனைகளை வழங்கும் உரித்தும் அதிகாரமும் பொறுப்பும் முதலமைச்சரைச் சார்ந்தது. ஆகவே இதில் இருக்கக் கூடிய வேறுபாடு என்னவென்றால் நியமனத்திற்கும் ஆலோசனைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்வதுதான்.

அதாவது, நியமிப்பதுதான் ஆளுநரின் அதிகாரம். ஆலோசனை வழங்குவதுதான் முதலமைச்சருடைய அதிகாரம். இந்த இரண்டும் சேர்ந்ததுதான் அமைச்சர்சபைஉருவாக்கமும் நியமனமும். இதிலே இரண்டும் சரியாகச்செயற்படவில்லைஎன்றால் அது முறையானதாக அமையாது. ஆகவே இதனை இரண்டு பேரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அவரவர்களுடைய கடமைகளை அவரவர் செய்தால் இந்தப் பிரச்சினைகள்இருப்பதாக எனக்குத்தெரியவில்லை.

இதிலே முதலமைச்சரின் செயற்பாடு ஆலோசனை வழங்குவதுதான். நியமனத்தை வழங்கலாம் என்றும் அவரும் சொல்லவில்லை, நீதிமன்றமும் சொல்லவில்லை. முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில்தான் ஆளுநரும் நியமிக்கலாம் என்பதையே நீதிமன்றம் தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. அந்த வகையில் தான் இந்தச் செயற்பாடு சட்ட ரீதியாகவும் அரசமைப்புரீதியாகவும் அமையலாம், அமைதல் வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

### வருந்தத் தக்க நிலைமை இது

கேள்வி: அமைச்சர் நியமனத்தால்ஏற்பட்டிருக்கும் சிக்கல்களை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில்:உண்மையாகவே இதுவொரு வருந்தத்தக்க நிலைமைதான்.இதனைத் தீர்க்க வேண்டியவர்கள் முதலமைச்சரும் ஆளுநரும்தான்.



### நாளாந்த நடவடிக்கைகள் பாதிப்படையா

கேள்வி : தற்போது ஏற்பட்டிருக்கும் சிக்கல்கள் மாகாணசபையின்செயற்பாட்டில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும்?

பதில்:மாகாணநிர்வாகக் கட்டமைப்பை பொறுத்தவரையில் நாளாந்த நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை. ஆனால் கொள்கையளவிலே அமைச்சர் சபை எடுக்க வேண்டிய தீர்மானங்கள் அல்லது முடிவுகள் எடுக்கப்படுவது தாமதிக்கப்படலாம்.இப்போதுமுறைப்படியான அமைச்சர் சபை இல்லையென்பது ஒரு சாராருடைய கருத்து அல்லது நீதிமன்றத்தினுடைய கருத்து.இந்தக் காரணத்தினால் ஒரு தேக்க நிலை இருக்கலாம். ஆனால் அது சாதாரண நாளாந்த நடைமுறையைப் பாதிக்காது. அதே நேரம் கொள்கை கோட்பாடுகள் அடிப்படையிலான தீர்மானங்களை எடுப்பதில் சில வேளைகளில் பாதிப்பு ஏற்படும் என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு.

கேள்வி:அமைச்சர்விவகாரத்தால்ஏற்பட்டிருக்கும் சிக்கல்கள் எவ்வாறு தீர்க்கப்படப் போகின்றன?

பதில் : உண்மையாகத் தீர்க்கப்படலாம். அதாவது முதலமைச்சர் எனக்கு அனுப்பிய கடிதத்தில் ஆளுநர்வர்த்தமானியில் பிரசுரித்தால் பிரச்சினை தீர்க்கப்படுமென குறிப்பிட்டிருக்கின்றார். அந்த விடயத்தை உடனடியாகவே நான் ஆளுநருக்கும் அனுப்பியிருக்கிறேன். ஆனால், நீதிமன்றத்தீர்ப்புஎன்றுவருகின்ற பொழுது நீதிமன்றம் டெனிஸ்வரனை நீக்கிய முறைமை பிழை என்று சொல்லியிருக்கின்றது. அதே நேரம் நான் முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் நீதிமன்றத் தீர்பிலே இடைக்கால நிவாரணம்நியமன அதிகாரிகள் முறைப்படியாகச் சட்டத்தின் படி டெனிஸ்வரனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு நீதிமன்றம் தடையாகஇருக்காது என்றவிடயமும்சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே இந்த விடயத்தை சுமூகமாகத் தீர்ப்பதற்குப்பார்க்கவேண்டும். இதனைச் சுமூகமாகத் தீர்க்கின்றபொறுப்புமுதலமைச்சரிடமும் ஆளுநரிடமும் தான் இருக்கின்றது. ஆகவே அவர்கள் விரைந்து தீர்க்க வேண்டும் என்பது பொதுவாக மாகாண சபையினுடையதும் பொது மக்களுடையதும் கருத்தாக இருக்குமென்று நான் நினைக்கின்றேன்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.